123·1


[N]o. M. 2210 வருஷ சந்தா ரூ. 1-8-0

[EDITOR &] PROPRIETOR } வை. மு. கோதைநாயகி அம்மாள்
(MRS. V. M. PARTHASARATHY IYENGAR.)

# JEGAN MOHINI

# ஜகன்மோகினி

மலர் VI MAY 1929. இதழ் 5



தனிப் பிரதி அணா 3.

X
M211, N22JM
M29.6.5
182856

[ஜ]கன்மோகினி ஆபீஸ்,
26, தோடித் தெரு,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

குறிப்பு:—ஒவ்வொரு மாதமும் கடைசித் தேதிக்குள் சஞ்சிகைவெளியாகும்

## கெட்டி சாயம்! உயர்ந்த உடை!! விலை நயம்!!!

உயர்தரமான பம்பாய் கெட்டிச் சாயமுள்ள

# கலர் புடவைகள்.

இவைகள் தினந்தோறும் தோய்த்து அணியத் தக்கவை. செம்புரோஸ், ஆரஞ்சு, பச்சை, சாக்லேட் நிறங்களில் கிடைக்கும். பெண்மணிகளைத் திருப்திப்படுத்த பளபளப்பும் வசீகரத்தோற்றமும் கொண்ட இவ்வாடைகளை வாங்குதலே சரி.

அளவு 18 × 2¾ முழங்கள்.

முதல் ரகம் விலை ரூ. 5-0-0 2-வது ரகம் ரூ. 4-0-0 பூக்கொடிக்கரை நெய்து முந்தாணியில் பூவேலை செய்திருக்கும் உருப்படி 1-க்கு ரூ. 1-8-0 அதிகம்.

# ஜர்மன் சில்க் புடவைகள்

சாதா: மயில் கழுத்து, பொன் வண்டு, மேகவர்ணம், மாந்துளிர், பச்சை, அரக்கு, கருப்பு முதலிய எல்லாக் கலர்களிலும் கிடைக்கும். பெங்களூர் முந்தாணி போட்டது. கலர் கெடாதது. மனோகரமான மழமழப்பு. பளபளப்பு மாறாதது. ரம்மியமான தோற்றமுள்ளது. நேர்த்தியான நெசவு கொண்டது. நீடித்து நிற்பது. உறுதியானது.

18 × 2¾ முழங்கள் விலை ரூ. 11-0-0
ரவிக்கை துண்டு 1-க்கு 0-11-0

கோட்டடி: கரைகளில் பேட்டு வைத்து உடலில் பவழக் கொடி, தந்திக் கம்பி, டில்லி தர்பார் முதலிய தினுசுகள்.

18 × 2¾ விலை ரூ. 11-4-0
ரவிக்கை 1 முழம் 0-12-0

மேற்படி பிளேன், கொட்டடி தினுசுகளில் ருத்திராக்ஷப் பேட்டு வைத்து தலப்பிலும் ஜரிகை (கருக்காதது) வேலை செய்ய உருப்படி 1-க்கு 3-0-0 அதிகம்.

குறிப்பு:—உத்தம உடைகளுக்கு உத்தரவாதம். ஆகவே நல்ல சரக்குகளை இங்கேயே வாங்குங்கள். ஆர்டருடன் கால் பங்கு முன் பணமனுப்புக. தபால் கூலி வேறு.

ஒரே சமயத்தில் 100 ரூபாய் சரக்கு வாங்குபவர்க்கு 1 ரூபாய்க்கு 0-1-6 வீதம் குறைக்கப்படும்.

ஸிட்டி நெசவுச் சாலை,
65, அரமனைக்கார வீதி,
ஜி. டி. சென்னை.

ஏஜண்டுகள் தேவை.

# இனம்!  இனம்!!  இனம்!!

## சொற்புதிர் நெம்பர்—1. அறிக்கை.

சரியான விடை

1 மாகாத்மா காந்தி.
2 ஸ்வராஜ்யா.
3 காதலர்கள்.
4 சிவனடியாா்.
5 வந்தேமாதரம்.
6 அதரபானம்.
7 இன்ப வாழ்க்கை.
8 ஹார்மோனியம்.
9 தேச பக்தர்
10 கடவுள் துணை.

அநேக நண்பர்கள் சரியான விடையனுப்பவில்லை. இருந்தாலும் எல்லோரையும் போட்டியிற் சேர்த்துக்கொண்டோம்.

### பரிசு பெற்றவர்கள்.

1. வி. அனந்தராமன் "குமரவிலாஸ்" திண்டுகல்.
2. ஸௌ. மோகாம்பாள் அம்மாள் C/o T. N. பஞ்சாபகேசய்யர் B.A. B. L. அட்வகேட் 37, வெங்கடாஜல செட்டி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.
3. S. கிருஷ்ணமூர்த்தி, கிளார்க், தி பிரிடானியா பப்ளிஷிங் கோ. 11, வெங்கடாஜல முதலி தெரு, வேப்பேரி சென்னை.
4. B. S. ராமகிருஷ்ணய்யர் போன்வாம்பட்டி, தொண்டாமுத்தூர் போஸ்ட், கோயமுத்தூர் தாலுக்கா.
5. G. K. ராமமூர்த்தி, 22, கானுபாக் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை. பரிசுகள் தபாலில் அனுப்பப்பட்டு விட்டன.

### எழுத்து மாறிய வார்த்தைகள் நெம்பர் 2.

1 பசந்தாஸ்துதே.
2 த்யாகசக்திகிரம்.
3 உல்தக்காண்மை.
4 ரனபாஸ்தம்.
5 தன்மமன்.
6 மித்தேசசுதிரன்.
7 மலாயிடமள்.
8 மஞ்சிதரமேனம்.
9 தேரதபாவி.
10 ஜதிபாராலய்.

மேற்கண்டவைகளை சரியான விடைகளாக அமைத்து 3 அணு ஸ்டாம்புடன் ஜூன் மாதம் 30-ந்தேதிக்குள் அனுப்பி விடவேண்டும். பிரவேசக்கட்டணத்துடன் ஒருவர் எவ்வளவு விடைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.

கிடைத்த விடைகளைச் சேர்த்துக்குலுக்கி முதலில் எடுக்கிற விடைக்கு ரோல்ட் கோல்ட் பாக்கட் வாட்ச் ஒன்றும் மற்றும் ஒரு விடைக்கு ஒரு டைம்பீஸும் கொடுக்கப்படும். மற்றவர்களுக்கு அபூர்வமான சிறிய தமிழ் நாவல் ஒன்று அனுப்பப்படும். குலுக்கும் தேதி ஜூலை 15. பரிசுகள் குலுக்கியதும் உடனே தபாலில் அனுப்பப்படும். உடனே முந்துங்கள். சரியான விடைகளைத்தான் இத்தடவை போட்டியிற் சேர்த்துக்கொள்ளப்படும்.

ஆர். கே. எஸ். பாலு அய்யர்,
காரியதரிசி.
டி. ஸி. ஆர். வாசகசாலை,
ரெட்டகுடி,
அம்பல் போஸ்ட் தஞ்சை ஜில்லா

R. K. S. BALU IYER,
Secretary.
D. C. R. Vachakasala,
Rettakudi, Ambal Post,
Tanjore Dt.

P. S. & CO MADRAS.

## ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள்

## எழுதிய அற்புதமான நாவல்கள்

(சித்திரப் படங்களுடன் கூடியவை)

### கோபால ரத்னம்

இதில், வேலையில்லாத் திண்டாட்டத்தினால் படும் சங்கடங்களும், வரதக்ஷிணை யென்னும் பைசாசத்தினால் பிரிக்கப்பட்ட தம்பதிகளின் காதற் கடிதங்களும், உத்தம சகோதரர்களின் உயரிய வாஞ்சையும், உலகானுபவமே உருவாகக்கொண்ட அதி யற்புதமான இதர விஷயங்களும் நிறைந்து கிடக்கக் காணலாம் விலை அணா **14**

### மாதவமணி அல்லது மாசிலாக் காதல்

உண்மைக் காதலர்களுக்குச் செல்வம் பிரதான மன்று என்பதை விளக்கிக் காட்டும் சிறிய கதை. விலை அணா **3**

### வைதேகி

இதில், கற்பின் மாட்சியும், கதாநாயகி நாயகருடைய தெய்வீகக் காதலின் இலக்ஷணமும், துப்பறிபவரின் அற்புதமான திறமையும், ஹாஸ்ய வினோதச் செய்கைகளும் இன்னும் மற்ற ரஸங்களும் நிரம்பப்பெற்று ருசிகரமாக விளங்குகின்றன. விலை ரூ **2-8-0**

### பத்ம சுந்தரன்

இதில், மேனாட்டு நாகரிகத்தின் ஆடம்பரமும், முடிவில் அதனாலடையும் துன்பங்களும், கதாநாயக நாயகியின் காதலின் திறமையும், துப்பறிபவரின் விசித்திரமானதும், ஹாஸ்ய ரஸப்பிரதானமானதுமான செய்கைகளும் இன்னுமற்ற ரஸபாவங்களும் படிக்கப் படிக்கச் சலிப்பென்பதே தராமல் ஆநந்திக்கச் செய்யும். விலை ரூபாய் **2-8-0**

### ராதாமணி

இந்நாவலில் திடும் திடும் என்று தோன்றும் அதியாச்சரியமான சம்பவங்களும், மர்மமாகிய பல வினோதச் செய்கைகளும், காதலின் வீரமும், கற்பின் தீரமும் மற்றைய பாகங்களின் ஸாரமும் ஒன்றுகூடி படிப்போருக்கு ஓர் உயர்தர விருந்தாக விருக்கும். கடைசிப்பக்கம் வரையில் கதையின் முடிவை ஊகிக்கமுடியாதபடி பிரமிப்பை யுண்டாக்கச்செய்யும். விலை ரூ. **2-8-0**

### சண்பக விஜயம்

இதில் எந்தச் சம்பவமும் ஆச்சரியத்தை யுண்டாக்கக் கூடியதாயும், அறிவைப் புகட்டக் கூடியதாயும், தீயவருடைய மனதைத் திருத்தக்கூடிய வகையிலும் சிறந்து நிற்கும். விலை ரூபாய் **1-12-0.**

### கௌரீ முகுந்தன்

இது உலகானுபவத்தையே பெரும்பாலும் திரட்டித் தன்னகத்தே கொண்டது. சகோதர சகோதரியின் அத்யந்த ப்ரேமையும், அரசாங்கத்தின் அற்புதங்களும், குமுதாவின் அனியாயச் செய்கைகளும் இன்னுமற்றைய பாகங்களும் படிக்கப்படிக்கப் பிரம்மாநந்தமாயிருக்கும். விலை ரூபா **1-12-0**

**R. K. S. BALU IYER, Rettakudi, Ambal P. O.**

நவநீதத்தின் எதிர் பாராத செய்கையால், முத்துக்கிருஷ்ணன் தான் கையில் வைத்திருந்த கடிதத்தைத் தீக்கிரையாக்கு முன் அது அவனை யறியாது நழுவிக் கீழே விழுந்துவிட்டது. அதைக் கண்ட நவநீதம் தன் நாதனுடைய இரு கரங்களையும் பற்றிக் கொண்டு மிகுந்த சுவாதீனம் ததும்பிய பார்வையுடனும், தொனியுடனும் பேசத்தொடங்கி, "என் அன்பின் உருவே! தற்போது அக்கடிதமோ தமது கரத்தினின்று நழுவி எல்லோரையும் தாங்கப்பட்ட பூமாதேவியினிடம் போய்ச் சேர்ந்துவிட்டது. உலகத்திலுள்ள சகல பாரங்களையும் தாங்குவதுடன், சுக துக்கங்களையும் சகித்துக் கொண்டிருக்கும் நமது தாயினிடமுள்ள கடிதத்தை நம்மிருவரில் யாருக்களிக்கப் போகின்றாளோ பார்ப்போம்." என்று நகைத்தவாறு கூறியப்படியே தன் காலினால் கடிதத்தை எடுக்க முயன்றாள்.

இதைக் கண்ட முத்துக்கிருஷ்ணன் நகைத்தபடியே, நவநீதத்தைத் தனதருகில் இழுத்துக்கொண்டு, அவள் தன் காலினால் கடிதத்தை எடுக்கவொட்டாமல் தடுத்து, அவளைத் தனது மார்புறத்தழுவியவாறு "என் கண்ணே! நவநீதம்! அக் கடிதத்தை நீ உன் காலினால் எடுக்க முயன்றதை நான் தடுத்து விட்டதற்காக வருந்தாதே! அக் கடிதத்தை நீ பாராதிருப்பதே உசிதமென்பதை மற்றும் பலதரமும் உறுதியாகக் கூறுகின்றேன். என் காதற்கிளியே! அந்தக்கடிதத்தினால் நமக்குச் சாதகமு மில்லை; பாதகமும் இல்லை. எனினும் முதலில் பார்த்ததும் மன அதிர்ச்சியும், வருத்தமும் உண்டாவது சகஜம். அந்த அற்பத்திற்காக ஏன் வருந்தவேண்டுமென்பது தான் எனது நோக்கம். ஆகையால் இந்தக் கடிதம் வந்திருப்பதாகவே எண்ணாதே! இதை விட்டு விடு!" என்று வெகு பக்ஷத்துடன் கூறினான்.

இதைக்கேட்ட நவநீதம் "நமது மனத்தை வருத்தக்கூடிய கடிதம் யாதாயிருக்கும்?" என்ற கவலைகொண்டாள். அதை வெளிக்குக் காட்டாமல் நகைத்துக்கொண்டே "ப்ராணநாதா! தங்களுடைய திருவாக்கியத்திற்கு மறுவாக்கியத்தை ஒருபோதும் அடியேன் உரைக்க மாட்டேன். அக்கடிதத்தைத் தாங்கள் எடுக்கலாகாதென்று கட்டளையிடும் பக்ஷத்தில் அதை யான் பார்க்க முயற்சிப்பதில்லை; விட்டுவிடுகி

றேன். ஆனால், 'அக்கடிதத்தினால் நமக்குச்சாதகமு மில்லை; பாதகமு மில்லை' என்று தாங்களே கூறுகின்றீர்கள்; அதோடு மனத்தை வருத்துமெனவும் மொழிகின்றீர்கள். இவ்விதமாக இரண்டுவித வார்த்தைகளும் கூறுவதால்தான் என் மனம் தற்போதே குழப்பத்தையடைந்து தவிக்கின்றது. நமக்கு உபயோகமற்ற கடிதத்தைப் பார்ப்பதால் நமக்கென்ன குற்றம்? நெருப்பு தேகத்தில் பிடித்துக் கொண்டால் அதனால் உயிருக்கு ஆபத்து நேருவது திண்ணம்; தணலை மிதித்துவிட்டதனால் சற்றுச் சூடு உறைத்து எரிந்தால் உடனே தணிந்துவிடுகின்றது. அதே போல் நாம் அதைப் படித்துத்தான் பார்ப்போமே. அதனால் என்ன முழுகிவிடப்போகிறது! தாங்களே அதை எடுத்துப் படித்து விஷயத்தைச் சொல்லிவிடுங்கள். நான் பிடிவாதம் செய்வதாக எண்ணவேண்டாம். என்மேல் தயை செய்து கடிதத்தை எடுங்கள். அதில் எத்தகைய விஷயமிருப்பினும் யான் தங்கள் சித்தத்திற்கு மாறாக நடக்கமாட்டேன். ஏதோ! கடிதத்தை எடுங்கள்!" என்று வெகுவாய்க் கெஞ்சிக் கொஞ்சிக்கேட்டாள்.

தன்னாலான வரையில் எவ்வளவு சொல்லியும் கேளாமையால் அதற்குமேலும் நவநீதத்தின் வார்த்தையைத் தட்டமாட்டாமல் முத்துக்கிருஷ்ணன் அக்கடிதத்தை எடுத்து கையில் வைத்துக் கொண்டு "நவநீதம்! இதைப் படித்துத்தான் ஆகவேண்டுமோ?" என்றான்.

**நவநீதம்:**—நாதா! இந்த விஷயத்தில் மட்டும் நான் தற்போது தமது விருப்பத்திற்கு மாறாக நடக்கின்றேன் என்பதை எனதுள்ளம் அறியாமலில்லையாயினும் நமக்குச்சத்ருக்களோ மித்ரர்களோ யாராக இருந்தபோதிலும் இதில் என்ன விஷயத்தை எழுதி யிருக்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொண்டு அதன்படியே, நம்மை யறியாது நாம் ஏதேனும் தப்பிதம் செய்திருப்பினும் அதனின்றும் திருந்திக்கொள்ளலா மல்லவா? அதற்கே யான் கேட்கின்றேன்.

182856

**முத்துக்கிருஷ்ணன்:**—கண்மணி! நான் உன்மீது ஆயாசங்

கொள்ளவில்லை; இதோ அக்கடிதத்தைக் கொடுத்துவிடுகிறேன். நீயே படித்தறிந்துகொள்; கடவுளிருக்கிறார்" என்று தைரியமாகவிரு; அற்ப விஷயத்தைக் கண்டு மன அதிர்ச்சி யடையாதே"—என்று கூறியவாறு அந்தக் கடிதத்தை நவநீதத்தின் கையில் கொடுத்தான். நவநீதம் கடிதத்தை வாங்கியதும் ஆவலோடு படிக்க ஆரம்பித்தாள். அது ஓர் பெண் பிள்ளையின் எழுத்துப்போல தோன்றவே வியப்புடன் படிக்கலானாள். அது பின் வருமாறு:—

என் அன்பிற்கு ஆலயம் போன்ற காதல் கண்ணாளா! ஆசை மணவாளா! நாமிருவரும் கொண்டுள்ள காதலின் முதிர்ச்சியால் நான் உன்னை ஏகவசனத்திலேயே அழைக்கத் தலைப்பட்டுவிட்டேன். அதைப் பற்றி நீ கோபிக்க மாட்டாயென்று நம்புகிறேன். என்னாருயிர் அன்பா! நான் உன்னிடமிருந்து கடிதத்தைக் காணாது மிகவும் வாடி வருந்துகிறேன். ஏன் கடிதமே எழுதவில்லை? என்னை மறந்துவிட்டனையா! நாமிருவரும் சென்ற மாதம் சேலத்திற்குச் சென்றபோது, ரயில் பிரயாணம் செய்த உல்லாசத்தையும் அத்தருணம் நாமடைந்த அளவிட வியலாத பேராநந்தத்தையும் என்னை நீ நடத்திய மாதிரியையும் எண்ணி எண்ணி என் மனம் பெருவிம்மித மடைந்துள்ளது. அதுபோல மற்றும் ஒருதரம் பிரயாணம் செய்ய எப்போது சமயம் நேருமென்று யான் எதிர்பார்த்துக் கொண்டே இருக்கிறேன். நீ என்னை வேண்டியவரையில், ஒரு குறைவுமின்றி ஆடையாபரண அலங்கிருதமாகவே வைத்திருக்கிறாய். மாதா மாதம் தவறாது நூற்றுக் கணக்கில் பணமும் அனுப்பி வருகிறாய். எத்தனை போக பாக்கியங்களையும் நீ எனக்கு கொடுத்தபோதிலும் உன்னுடன் கூட சதா இருந்து மகிழாதவரையில் என் மனம் மட்டும் சமாதான மடையாது. ஆரம்பத்தில் வாரம் இரு கடிதங்களாவது உன்னிடமிருந்து கிடைத்து வந்தன. அதனால் நான் சந்தோஷப்பட்டேன். தற்போது உனது பாழாய்ப்போன போலீஸ் வேலையின் உபத்திரவத்தினால்

எனக்குக் கடிதமெழுதவும் நேரமில்லாது மறந்தும் விடுகிருய்; நீ உன் பெண்டாட்டியைத் தள்ளிவிட்டு என்னை வீட்டிலேயே கொண்டு வைத்துக்கொள்வதாக எழுதிக் கொடுத்த சாசனப்படி வருடங்கள் பலவாயும் இன்னும் அவ்வாறு செய்யவில்லை. அதற்குக் காரணம் அறியக் கூடவில்லை. உன்னுடைய ஆசையால் யான் எனது ஜாதியினரிடமும் பகைத்துக்கொள்ள நேருகின்றது. ஏனெனில் நீ யொரு புறமும் நானொரு புறமும் இருந்து கொண்டு மாதா மாதம் சம்பளம் வருவது போல் சொல்ப தொகையை மட்டும் அடைவதால் என் ஜாதியார் என்னை ஏசுகிருர்கள். வேறு பெரிய கைகளைப் பார்த்துக்கொள்ளும்படியாகக் கூறுகிருர்கள். என்னுடைய அந்தஸ்திற்கு நீ யனுப்பும் வருமானம் பற்றுவதில்லை. ஆகையால் செலவுக்குத் திண்டாடுகிறேன். நீ என்னைச் சில காலமாகக் கவனியாமையால் வேறு எங்கேனும் இடம் தாவிவிட்டாயோ என்றும் யோசனையாக விருக்கிறது. எதற்கும் நான் உன்னை நேரில் சமீபத்தில் பார்க்க எண்ணங்கொண்டிருப்பதால் உடனே நீ புறப்பட்டுவந்து சேர வேண்டியது. உடனே 200 ரூபாய்க்கு ஒரு செக்கு அனுப்பு. உன் குழந்தைக்கு உடைகள் ஒன்றுமில்லாமையால் வாங்கவேண்டும். உனது நவநீதத்தை என்று தொலைத்துத் தலை முழுகிவிட்டு என்னை அழைத்துக் கொள்ளப்போகிருய்? அதைத் தெரிவி. அந்தம்மாளும் ஒரு பெரிய கையைப் பிடித்திருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அதனுல் மெத்த சந்தோஷமே அடைகிறேன். ஏனெனில், அந்தச் சாக்கைக் கொண்டே நீ அவளை ஒழித்துவிட வழியுண்டு என்பதை மறக்காதே! உடனே நேரில் வந்து பேசிக்கொள்ளும்படியாக வந்து சேரு; மறக்காதே!

இங்ஙனம் உனது ஆசைக்காதலி
அதிரூபம்
(மிஸஸ். முத்துக்கிருஷ்ணன்)

அதை நவநீதம் தன் நாயகனின் செவிக்குக் கேட்கும்படியாக உரத்த குரலிலேயே படித்தாள். இதைக் கேட்டுக்கொண்டேயிருக்கும் முத்துக்கிருஷ்ணனுக்குச் சிரிப்பும், வெறுப்பும், முகக்கடுப்பும் ஒன்றுகூடி நாட்டியமாடுகின்றன. நவநீதம் இக்கடிதம் முற்றும் வெறும் அபத்தக் களஞ்சியம் என நன்கறிந்துகொண்டவளாகையால் பெருத்த நகைப்பேயுண்டாய்விட்டது. கடகடவென்று கைகொட்டி நகைத்துத் தன் நாயகனின் கரங்களைப் பற்றிக்கொண்டு "பேஷ் ப்ராணநாதா! இந்த விளையாட்டுக் கடிதத்தை வைத்துக்கொண்டா எனக்குக் காட்டலாகாதென்று வீணாக இத்தனை நேரம் வாதம் செய்தீர்கள்? இந்த அற்ப கடிதத்தைக்கண்டு நான் ஏன் மன வருத்தங்கொள்ளவேண்டும்? நெருப்பில் ஈ மொய்க்காது என்பதை யானறியமாட்டேனா! இது வேண்டுமென்று யாரோ க்ஷாத்திரத்தினால் வரைந்து விடுத்திருக்கிறார்கள் என்று தெட்டெனவிளங்கவில்லையா? என் ப்ராண வல்லபா! தங்களைப்பற்றி வசையாக வரைந்திருக்கும் இவ்வாபாசக் கடிதத்தை நம்பி வருந்த நான் என்ன அவ்வளவு மதியீனையா? என்னுடன் இதுகாறும் இருந்து பழகியும் தாங்களதைத் தெரிந்துகொள்ளாது பயப்பட்டு வருந்தலாகுமோ! நாதா! உலகம் பலவிதம். உலகத்தின் தன்மையை அனுபவபூர்வமாக நாம் கண்டறிந்து பல விஷயங்களையும் தெரிந்துகொண்டிருக்கிறோம். உலகத்தில் ஒருவர் நன்றாயிருக்க அதைக் கண்டு மற்றவர்கள் சகிப்பது கூடவில்லை. ஆண்பாலரோ, பெண்பாலரோ! யாராயினும் சரி, சற்று மேன்மையுற்று வருவார்களேயாயின் அவர்களுக்கு அவர்களை யறியாமலே பல சத்ருக்களும் கூடி விரோதம் செய்ய காத்துக்கொண்டிருப்பார்கள். அவர்களை வேண்டுமென்றே தூற்றவும், பழி சுமத்தவும், ஆபாசமான வார்த்தைகளால் வருத்தவும், ஒரு சமயம் உயிருக்கும் உலைதேடவும், இன்னும் எத்தனையோ விதமான தீய காரியங்களைச் செய்யவும் சற்றும் அஞ்சாது முற்படுவார்கள், நல்ல அறிவிலோ, அந்தஸ்திலோ, ஐச்வரியத்திலோ, அழகிலோ, அபூர்வமான நுட்பமதியிலோ, அரிய கல்வியிலோ, அபார வாக்குவன்மையிலோ, அற்புதமான குணத்திலோ, அதிசயமான மேம்பாடு நிறைந்த குணத்திலோ, இன்னும் மற்ற உயரிய பல அம்சங்களில் எதிலேனும்

யாரேனும் ஓங்கி வருவார்களேயானல் அவர்களுக்கு துர்க்குண முள்ள அயோக்கியர்களால் வேண்டுமென்று க்ஷாத்திரத்தினல் பலவிதமான வசைச்சொற்களேற்படுகின்றன. வேண்டுமென்று ஆத்திரத்தினுலும், நாம் என்ற அகங்காரத்தினுலும், குற்றமற்ற—கடவுளறிய நிரபராதியாயுள்ள—வர்கள் மீது அபாண்டமாயும், அனியாயமாயும், துராக்ருதமாயும் வசை மொழிகளைக் கூறிவிட்டத ஞல்—வரைந்துவிட்டதனல்—நிரபராதியாகிய அவர்கள் அக்குற் றத்தைச் செய்த அபராதிகளாக ஆய்விடுவார்களா என்ன! அது ஒருபோதுமில்லை. ஊனைச் சுமக்கும் ஈனர்கள் மற்ெருரு ஊனைச் சுமப்பவர்களை நோக்கி ஞானமில்லாது மனம் போனவாறு கூறி விட்டு அது அப்படியே ஊன்றிவிடுமாயின் அந்த தீனதயாளுவாயும், மானசம்ரக்ஷகனுயுமுள்ள வேணுகானனும் பொய்த்துவிடுவானு! அவனை நம்பி அவன் சாக்ஷியாக அவனையே அனவரதமும் அத்யந்த ப்ரீதியுடன் அடிதொழுதேத்தும் பக்தர்களின் உத்தம குணத்தை யும், பக்தியின் உறுதியையும் அந்தப் பரமன் அறியாமல் கண்மூடி விட்டானு! அவன் கண்மூடிவிட்டால் பின்னர் மண்ணேது! விண் ணேது! பெண்ணேது! ஆணேது! மற்ற எதுதான் எது! எல்லாம் ஒழிந்தன வன்றே! அச்சுதனின் ஆணைக்கு மீறி நடப்பவர்களை அவன் வீணே விட்டுவிடுவானு! அவர்களின் வாணுளிலேயே அவர் களே காணுதவாறு தண்டிப்பதற்குக் காத்துக்கொண்டிருக்கும் கரு ணமூர்த்தியல்லவா அவன்! ப்ராணநாதா! இருகண்களைப் படைத்த மனிதர்களுக்குத் தெரியாது ஒரு காரியத்தையோ, பொருளையோ, நன்மையோ, தீமையோ, எல்லாவற்றையும் ஒளித்துச் செய்துவிட் டுக் காரியசித்தி பெற்றுவிட்டதாக மகிழ்ச்சியடைந்துவிட்டால் அது மகிழ்ச்சியாகுமா? எங்கும் நிறைந்த சர்வ வ்யாபியாகிய மங்கள ரூபனுடைய எண்ணரிய கண்களுக்கு எட்டாத செய்கை ஒன்று உண்டா? அவன் தீயவர்களையும் நல்லவர்களையும் சம இடையாகக் கவனித்துக்கொண்டு வரும் நித்திய கல்யாணகுண நிர்மலஹ்ருதய னல்லவா! உலகத்தை ஆக்கிய உத்தமன் உலகிலுள்ள சேதனர் அசேதனர்களின் செய்கைக்கேற்றவாறு தண்டித்துத் தீர்ப்புகூறும் தொழிலைவிட்டுவிடுவானு! அத்தொழில் அவனுடைய பொறுப் பல்லவா? நமது உத்தம குணத்துக்கு அவன் மகிழ்ந்து அவ

னடியை நமக்கு அளித்தல் நமக்கு முக்கியமேயன்றி மற்ற மனிதர்களின் புகழ்ச்சியோ, இகழ்ச்சியோ நமக்கு அநாவசியமல்லவா? ஒரு மரத்தில் உள்ள இலைகள், புஷ்பங்கள், காய்கள், கனிகள் முதலிய யாவும் அம்மரத்தினடியிலேயே விழுந்துவிடுமேயன்றி வேறு மரத்திற்குச் சென்று விழாது. அதுபோல ஒருவர் துர்க்குணத்தினால் வேண்டுமென்று கூறும் பல மொழிகளும் அவர்களையே தான் சாருமே யன்றி நம்மைச் சாராது. மற்றும் காமாலை வந்தவர்களின் கண்ணிற்கு அவர்கள் நோக்கம் யாவும் மஞ்சளாகத் தெரிவது போல் துர்க்குண முடைய மனிதர்கள் தமது நடவடிக்கைகளைப் போலவே பிறருடைய நடவடிக்கைகளையும் எண்ணிக்கொள்வது சகஜம். குடியைக் கெடுக்கும் குண்டுணிகள் வ்யாபித்து விட்ட உலகத்தில் அக்கிரமமும் அநியாயப் பழியும் மிளிருவதைக் கேட்க வேண்டுமோ! நாதா! அன்யோன்யமாயுள்ள நம்மைப் பிரிக்க வேண்டுமென்ற தீய சிந்தையினால் யாரோ வேண்டு மென்று திரித்துவிட்டிருக்கும் கயிறே இது. முற்பவத்தில் நாம் அநியாயமாக யாரை வைதோமோ இப்போது நாம் இவ்விதம் குற்ற மற்றிருந்தும் வீணுகக் கேட்கிறோம். எல்லாம் அவன் மாயை. அவன் பாதத்திற்கே அர்ப்பணம் என்று விட்டுவிட்டால் நமக்கோர் கவலையுமில்லை. நாம் சுத்தாத்மாவா, அசுத்தாத்மாவா என்பதை அந்த பரம தயாகரன் அறிவான். அவன் அதற் கேற்ப முடிவைக் காட்டுவான். வீணுக நாம் ஏன் கவலைப் படவேண்டும்? பிறரை தூஷிப்பதற்கென்றும், உத்தமர்களை உடலெரியச் செய்வதற்கென்றும் சிலர் ஜனித்துள்ளார்கள். அவர்கள் தங்களுடைய செய்கையின் பலனை அடையாமலிருக்கமாட்டார்கள். நாதா! நான் பெருத்த கையைப் பிடித்திருப்பதாக எழுதி யிருப்பதுவும் வாஸ்தவந்தான். உலகத்தையே குட்சியில் வைத்துக்கொண்டிருக்கும் கரம் பெருத்த கையல்லவா! யான் அவனது அபயத்தைத் தான் நாடி தினம் வழிபட்டுத் தொழுகின்றேன். இது உண்மை யல்லவா! அந்த அந்தரங்க துணைவனுடைய அந்தமான கை நமது சொந்தமான கையாகிவிட்டால் நமது சிந்தையின் சந்தோஷத்தைச் சொல்ல வேண்டுமோ! கவலை நம்மை யணுகுமா! அந்த ரகஸியக் காதலனின் நட்பை நாடி யிருப்பதை !இந்த கடிதம் எழுதிய புண்ணியாத்து

மாக்கள் எவ்விதமோ தெரிந்துகொண்டுதான் எழுதியிருக்கிறார்கள். இருக்கட்டும்; எழுத்து கற்றதன் பயனை இவ்வித ஆபாஸமான—வசையான, படா பழியாகிய அக்ரமமாகிய—கடிதத்தை எழுதியேனும் தமது எழுத்தின் வரிசையைக் கண்டு களிக்கின்றார்கள் போலும். கண்ணாடியில் பாதரசமிருக்கும் வரையில் அதில் காணும் நமது முகம் இயற்கையாக விளங்கின்றது. பாதரஸம் அவிந்துவிட்டால் அதில் காணும் நமது முகம் விகாரப் பட்டுவிட்டதாகவே தோன்றுகின்றது. அதே போல மனிதருடைய மனமென்னும் கண்ணாடியில் கடவுளால் அளிக்கப்பட்ட அறிவு என்னும் பாதரஸம் அழிந்துவிட்டால் எல்லாம் விபரீதமாகத் தோன்றுகின்றது. ப்ராண துரையே! என் ஓரே ப்ரமை கொண்டவர்கள் போல உட்கார்ந்து விட்டீர்களே! ஒன்றைக் கொள்ளவேண்டுமோயின் ஒன்றைத் தள்ளவேண்டும். தீரத்தைக் கொள்ளவேண்டுமாயின், மனத்தின் அந்தகாரத்தைத் தள்ளவேண்டும். ஞானத்தைக்கொள்ள வேண்டுமாயின் அஞ்ஞானத்தைத் தள்ளவேண்டும்; அறிவைக் கொள்ளவேண்டுமாயின் அறியாமையைத் தள்ளவேண்டும். ஈசனின் பாதத்தைக் கொள்ளவேண்டுமோயின் ஆசையின் மோகத்தைத் தள்ளவேண்டும். அதுபோல ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொன்று இணைக்கப்பட்டிருக்கின்றது. அதே போல நாம் தற்போது இந்த விகிதத்தைத் தள்ளிவிட்டு அகிலத்தை யாளும் அன்பனின் பாதத்தில் சகலத்தையும் அர்ப்பணம் செய்து நம்மையாட்கொள்ளும்படி வேண்டிக்கொண்டால் அதுதான் யுக்தமானது. தாங்கள் ஆண் சிங்கமல்லவா! தாங்கள் என் இவ் விஷயத்தில் இவ்வித் மாறுபாடடையவேண்டும்? வேண்டாம்; கவலை கொள்ளவேண்டாம். இந்த அநியாயக் கடிதத்தினால் நான் தங்கள்மீது என்னுயிர் போனாலும் ஐயங் கொள்ளமாட்டேன். தாங்களதை நம்பலாம். நாதா! உண்மையில் தாங்கள் அவ்விதமான நடத்தையில் இருப்பவர்களாயினும் சரி; நான் அதற்கு விரோதம் எண்ணாது இருவருக்கும் சேவகியாகவே விருந்து களிப்பேன். பதியின் இச்சையைப் பூர்த்தி செய்யும் விஷயத்தில் நான் பேரவாக் கொண்டுள்ளவள் என்பதை நான் கடவுள் மீது ஆணையாகச் சொல்கிறேன். என்னுருயிர் துரையே! இக்கடிதத்தை எழுதியவர்கள் யார் என்பதை நாமறியா

# முக்கிய அறிவிப்பு

ஸர்வ வ்யாபியான பரந்தாமனின் பரம காருண்ய கடாக்ஷத்தினுலும் பெரியோரின் ஆசீர்வாதத்தினுலும் நமது நூலாசிரியரின் தேக நிலைமை சற்று குண மடைந்து வருகின்றது. இது சம்பந்தமாக விசாரித் தெழுதிய சந்தா நண்பர்களுக்கு எமது மனமார்ந்த நன்றி யறிதலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

4-வது இதழில் 3-வது பக்கத்தில் முக்கிய அறி விப்பு என்னும் தலையங்கத்தின் கீழ் நமது நூலாசிரிய ரின் தேக அசௌக்கியத்தைப் பற்றியும், 5-வது இதழ் மே மாதக் கடைசியில் வெளிவருமென்பதைப் பற்றியும் தெரிவித்திருந்தும் அநேகர் அதைக் கவனிக்காமல் "ஏன் ஏப்ரல் மாதச் சஞ்சிகை வரவில்லை?" என்று அநா வசியமாய்க் கடிதங்கள் எழுதி வீண் செலவும், சிரமமும் அடைந்தது வருந்தத்தக்கதே.

நிற்க, சில மாதங்களுக்கு முன் நமது நூலாசிரியர் எழுதிய 'கோபாலரத்னம்', 'மாதவமணி' அல்லது 'மாசிலாக்காதல்' என்னும் இரண்டு நாவல்களை அவற் றின்பிரசுரகர்த்தர்கள் தற்போது வெளியிட்டுள்ளார்கள்.

"கோபாலரத்னம்" (பிரசுரிப்போர்:—ஸ்ரீ வேங்கட நிலையம் மஞ்சகுப்பம் Cuddalore.

"மாதவமணி" அல்லது மாசிலாக் காதல் (பிரிசுரிப்பவர்:— Mr. R. K. S. Balu Iyer, Rettakudi, Ambal P. O.

(இவற்றைப் பற்றிய விவரமான விளம்பரம் மறு பக்கத்தில் காண்க)

மேற்படி புத்தகங்கள் நமது சொந்த பதிப்பல்லவா கையால் நாம் நமது சந்தா நேயர்களுக்காக விலையைக் குறைக்க முடியாமைக்கு வருந்துகிறோம்; ஆயினும் ரூ 1—1—0 முன்பணம் அனுப்புகிறவர்களுக்கு இரண்டு புத்தகங்களையும் தபாற் செலவின்றி அனுப்புகிறோம்.

மானேஜர்.

---

# 15-ரூபாய் இனம்

நான்காவது சஞ்சிகையில் பிரசுரித்த மேற்படி போட்டி அநேகருடைய வேண்டுகோளுக் கிணங்கி

ஜூன் மாதக் கடைசி வரையில் ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் இதில் சேர விரும்புவோர் உடனே மணியார்டர் அனுப்பி புத்தகங்களைப் பெற்றுக் கொள்ளவும்.

வத்ஸா கம்பெனி
திருவல்லிக்கேணி, மதராஸ்

---


# A WORD
## TO
# Authors and Publishers

—:o:—

If your finish and get up is good,
make it Better with
Illustrations from
**R. V. Raman Bros.**
Illustrators, designers, Half Tone and Line
block makers, Lantern slide
makers, oil painters,
bromide enlargers
photographers &c.

***Satisfaction a Guarantee***
***Charges moderate***

## R. V. RAMAN BROS.
***22, Broadway, MADRAS.***


---

## பரிசுகளின் விவரம்.

நான்காவது சஞ்சிகைக்குப் பிறகு பணம் அனுப்பியவர்களில் கீழ்க் கண்டவர்களுக்கு பரிசுகள் விழுந்திருக்கின்றன.

சந்தா. நெ.

4166. Mr. G. Srinivasa Iyengar, Ayanthur.

4282. Srimathi Alamelu Ammal, Bellary.

மேற்கூறியவர்கள் தமக்கு வேண்டிய புத்தகங்களைத் தெரிவித்தால் அனுப்புகிறோம்.

அடுத்த சஞ்சிகை வெளியாவதற்குள் சேரும் சந்தா நேயர்களுக்கும் 5-ரூபாயில் இரண்டு பரிசுகள் கொடுக்கப்படும்.

நவீன நாவல்களைப் படித்துப் படித்து இன்புறும்
சகோதர சகோதரிகள் கைக் கொள்ளத்தக்க
புத்தக ரத்தின மொன்று தற்போது வெளி
வந்திருக்கின்றது.

எது?

காதற் கடிதங்கள்
மிளிரும்

# கோபால ரத்தினம்

**வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதியது**

இப் புத்தகம் நாவல்களுக்குள் இரத்தின மென்றே சொல்லப் படும். சித்தங்களிக்கும் நற்றமிழ் நடை வாய்ந்தது. வரதக்ஷிணையால் மண மக்களுக்கு நேரும் மனக் கவலை, துன்பம், பிரிவு, உலக நிந்தை முதலியவற்றை வெள்ளிடை மலைபோல் தெள்ளிதில் விளக்கிக் காட்டுவது; பணப் பேராசை கொண்ட பைத்தியக்காரர்கள், அந்தப் பணத்தைத் தேடும் பொருட்டுச் செய்யும் இழி தொழில்களையும், பேசும் இழிவான பேச்சுக்களையும், பெற்ற பிள்ளைகளா யிருந்தாலும், அவர்கள் மிக்க படிப்பாளிகளா யிருந்தாலும், புத்தி சாலிகளா யிருந்தாலும் விதி வசத்தால் சம்பாத்திய மில்லாதவர்களா யிருந்தால் அவர்களை அவமதித்துப் பேசுவதையும், கொடுந் துன்பங்களுக்குள்ளாக்குவதையும் தெளிவாகக் கூறுவது. மாமியார் கொடுமை, மருமக்கள் துயரம், கெட்ட தாய் தந்தையரின் இயற்கை, நல்ல பிள்ளைகளின் தன்மை, சகோதர வொற்றுமை, ஓரகத்திகளின் ஒற்றுமை, நன்னட்பின் இயற்கை, மித்திரப்பேதக் காரரின் அயோக்கியத்தனம், வகுப்புத் துவேஷத்தாலுண்டாம் சங்கடம் முதலியவற்றையும் விளங்க உணர்த்துவது; உண்மைக் காதலரின் அன்பு, அவர்களின் பிரிவாற்றாமை, வைத்த அன்பு மாறாத மனவுறுதி முதலியவைகளும் இந் நாவலில் நன்கு விளக்கிக் காட்டப் பட்டிருக்கின்றன. இக் காலத்தில் சில விபரீத குடும்பங் களில் நடக்கும் ஒழுங்கீனங்களை யெல்லாம் இந் நூல் உள்ளது உள்ளபடியே உரைக்கும் உயர்வு வாய்ந்தது. இன்னும், 'முயற்சி யுடையார் இகழ்ச்சி யடையார்' என்பதை உறுதியாகப் போதிக்கத் தக்கது. வேடிக்கையாகப் பொழுதுபோக்குதற்காக மட்டும் இது படிக்கக் கூடியதன்று; படிப்பார்க்கு அரிய பெரிய நீதிகளையும்,

பிழைக்கும் வழியையும் உபதேசிக்கக் கூடியது. "புஸ்தகம் அஸ்த பூஷணம்" என்னும் பொன்போன்ற நன் மொழிக்கு இலக்கியமாக அமைந்தது இப் புத்தக மொன்றே.

இதைக் கையிலெடுத்துப் படிக்கத் தொடங்கியவர்கள் கடைசி வரை படித்து முடிக்காமல் கீழே வைக்கமாட்டார்கள். படிப்போர் அருவருக்கத்தக்க எந்த விஷயமும் இதில் இராது; இது, ஒவ்வொரு குடும்பத்திலுமுள்ள ஆண் பெண்களனைவரும் ஆவலோடு படித்துப் பயன் கொள்ளத்தக்கது.

சகோதர சகோதரிகளே! நீங்கள் நம்முடைய நாவல்கள் பலவற்றைப் படித்தின்புற்றிருப்பீர்கள். எனினும், இதைப் படித்தால் விசேஷ ஆனந்தத்தை அடைவீர்கள். நம் 'ஜகன்மோகினி' சந்தாதாரர்களிற் பலர், முன்னரே இப் புத்தகத்திற்குத் தங்கள் பெயரை ரிஜிஸ்டர் செய்துகொண்டிருப்பதால் இதன் காப்பிகளில், அவர்களுக் கனுப்பப் பட்டவை தவிர எஞ்சி யிருப்பவை முந்திக் கொள்பவர்களுக்கே கிடைக்கும். ஆதலின், விரும்புவோர் விரைவில் இதற்கு ஆர்டர் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறோம். பிந்துவோர்க்கு அடுத்த பதிப்புப் புத்தகந் தான் கிடைக்கும்.

**இதன் விலை அணு 14 தான்**

**குறிப்பு:—முன் பண மனுப்புவோர்க்குத் தபால் செலவு இனாம்.**

---

**காதல் ரஸம் ததும்பும்**

# மாதவமணி

**அல்லது**

## மாசிலாக்காதல்

**வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதியது**

உண்மைக் காதலர்களுக்குச் செல்வம் பிரதானமன்று என்பதை விளக்கிக் காட்டும் சிறிய கதை.

**விலை மூன்றணு தான்**

"ஜகன்மோகினி" ஆபீஸ்
26 தோடித் தெரு
திருவல்லிக்கேணி
சென்னை

Published by V. M. Parthasarathy Iyengar,
*for* "JAGANMOHINI OFFICE"
PRINTED AT THE TATA PRESS, MADRAS.

விடினும் இக் கடிதத்தின் நடைப் போக்கையும்,எழுத்தின் லக்ஷணத்தையும், பதப் பிரயோகத்தையும் உற்றுநோக்குங்கால் இதை எழுதியவர்கள் பொறாமை என்னும் பேயினுக்கு அடிமைப் பட்டவர்களென்றும், குடியைக் கெடுக்கும் கோடரிக் காம்புகள் என்றும், சதிபதிகளைப் பிரித்து பரிதபிக்கச் செய்து வேடிக்கை பார்க்கவேண்டுமென்ற துர்க்குணம் நிரம்பிய துஷ்டர்களென்றும், வேண்டுமென்றே பிறரைப் பழித்து வயிறெரியச் செய்யும் வீணர்களென்றும், வஞ்சகக் குணமும், சூதும், மோசக் கருத்தும் நிரம்பப் பெற்றவர்களென்பதும் தெட்டெனஉள்ளங்கை நெல்லிக் கனி போல விளங்குகின்றன. நாதா! வாய் வைதால் மடி ஏந்துகின்றது" என்பதுபோல அவர்கள் பிறரைக் கூறும் வசைளெல்லாம் பசைபோல அவர்களையே பிடித்துக்கொள்ளும். நாம் பிறரைத் தூற்றினுல் நம்மை வேறு ஒருவர் தூற்றக் காத்துக் கொண்டிருப்பார்கள் என்பது நிச்சயம். இதை ஒருவன் அறிவின்மையால் அறியாவிடினும் எப்போதேனும் ஒரு காலத்தில் அதை அறியும்படி அந்த ஆயர்குலக் கண்ணன்—அஞ்சன வண்ணன்—செய்வானே யன்றிச் செய்ய மறக்கமாட்டான். அடியார்க் கடியவன் என்ற பட்டத்தைப் பெற்றவன்,—அந்த பரந்தாமன், புண்டரீகாக்ஷன், புவி நாயகன்—தன் அடியாருக்கு விரோதியைத் தண்டியாது வாளாவிருப்பானேயானுல் அவனது பட்டம் ஒரு சட்டமாகுமா? அவனைத் திட்டமாக நம்பிய பக்தர்களின் கண்களிலிருந்து சொட்டும் கண்ணீரானது வெட்டாத குளமாய்விடாதா! அதைக் கண்டு அவன் சகிப்பானு! ஒருபோதும் சகிக்கமாட்டான். ஆபத்பாந்தவன் என்ற பெயரைப் போக்கிக்கொள்வானு அவன்? தன் அடியார்களைக் காப்பாற்றாது கை விடுவானு? ஆகையால் தாங்கள் ஒருவிதமான சிந்தனையுங் கொள்ளாமல் என்னப்பன் க்ருபா மூர்த்தியை தியானித்துக்கொண்டு உங்கள் பொழுதைப் போக்குங்கள்.எல்லாவற்றையும் அவன் பாதத்தில் அர்ப்பணம் செய்யுங்கள்; அவனடியை மறவாது பஜியுங்கள்; கூடுமான வரையில் நற்கிருத்யங்களைச் செய்யுங்கள்; அவன் விட்ட வழியாகிறது. நாதா! இன்று இத்தனை நேரமும் வீணை பொழுதாகப் போய்விட்டது. எழுந்திருங்கள்; சாப்பிடுவதற்கு நேரமாய்விட்டது. மேலும் நேற்று எனது தந்தை வரும்படியாக அழைத்திருக்கின்றீரே!

அங்கு சென்று விசாரித்துக்கொண்டு வரவேண்டாமா! எழுந்திருங்கள்'' என்று பெரியதோர்ப்ரசங்கம் போலக் கூறிப் பின் தன் நாயகனை வெகு அன்பாயும், கனிவாயும் நோக்கியவாறு, அவன் கரத்தைப் பிடித்திழுத்தாள்.

நவநீதத்தின் தேனோ பாகோ தெவிட்டாக் கனியோ என்னும்படியான மொழிகளாகிய நவநீதத்தில் பக்தி ரஸமாகிய சர்க்கரையைச் சேர்த்தது போலான ப்ரசங்கத்தைக் கேட்கக் கேட்க முத்துக் கிருஷ்ணனுடைய அகம் மகிழ்ந்து விகஸிதமடைந்தது. கானத்தைக் கேட்டுப் பரவசமடைவதுபோல் நவநீதத்தின் ஞானத்தைக் கேட்டு சரீரத்தையே மறந்தான். முற்பவத்தில் எத்தகைய புண்ணியத்தைச் செய்தோமோ தெரியவில்லை; இப்பொழுது இத்தகைய அபாரமான ஞான பொக்கிஷத்தை யடைந்து சந்தோஷ மடையும்படிக் கடவுள் கிருபை செய்தார்!'' என்று எண்ணிப் பூரித்துப் புளகாங்கிதமடைந்தான். நவநீதத்தின் மொழியாகிய தேன்மாரியானது அதி மாதுரியமாகச் செவித் துவாரத்தின் வழியே உட்செல்வது நின்றுவிடப் போகின்றதே என்றும் ஏங்கினான். அவ்வாறு இருக்கும் தருவாயில் நமது நவநீதம் தனது பிரசங்கத்தை நிறுத்தி தன தன்பனை போஜனத்திற் கழைத்ததை உணர்ந்த முத்து க்ருஷ்ணன் அளவி லடங்காத ஆநந்தத்துடன் நவநீதத்தை சிறிய குழந்தையைப் போல வாரி யணைத்துத் தான் இதுகாறும் அடைந்த ஆநந்தத்தின் அறிகுறிகளாகிய உயரிய நல் முத்துக்களை அவனுடைய அன்பாகிய தங்கக் கம்பியினால் பிணைத்து அவற்றை நவநீதத்திற்குப் பரிசாக அளித்துப் பின் "என் கண்ணின் கருமணி போன்ற நவநீதம்! நீயே இதுபர்யந்தம் எனக்கு வயிறும், மனமும், ஆத்மாவும் மகிழும்படியாக அமுதூட்டிவிட்டுப் பின் நீயே உண்பதற்கு அழைக்கின்றாயே! இதென்ன விந்தை கண்மணி! நீ இதுகாறும் கூறி வந்த மொழிகளுக்கு யான் யாது பதிலளிப்பதென்றும் எனக்குத் தோன்றவில்லை; ப்ரமை கொண்டவன் போலாய்விட்டேன். கண்ணே! நவநீதம்! இக் கடிதம் மிகவும் அல்பமானதாக விருந்தும் நான் ஏன் கொடாது தாமதித்தேனெனில், இந்த வீணான அபவாதத்தைக் கண்டால் உன் மனம் எந்தவிதமான நிலை

மையை அடையுமோ! என்ற பயத்தினாலேயே தவிர வேறன்று. உன்னுடைய மேலான போக்கையும், தெய்வ பக்தியை ஆதாரமாகக் கொண்டிருக்கும் தன்மையையும் அறிந்தும் அறியாத மூடனானேன். திடீரென்று ஓர் அபாண்டத்தைக் கேட்டால் எத்தகையோருக்கும் மன அதிர்ச்சி யுண்டாவது சகஜ மல்லவா! அதை யுத்தேசித்தே யான் மயங்கினேன். கண்மணி! நேற்று அந்த முறட்டுத் தடியர்களால் இம்சை பட்டதனால் எனது தேகம் மிகவும் பாதை யடைந்திருந்தது. உனது பிரசங்கத்தின் ச்வாரஸ்யத்தால் எல்லாம் நீங்கி விட்டதென்றே கூறலாம். ஆ! என்ன மடைமைத் தனம் செய்தேன்! நீ பட்டினியாக விருப்பதை மறந்துவிட்டேனே! இதோ வந்துவிட்டேன்" என்று கூறிக்கொண்டே எழுந்து ஸ்னானத்திற்குச் சென்றான்.

தயாராக வைத்திருந்த வென்னீரில் ஸ்நானம் செய்துவிட்டுப் பூஜை முதலியன முடித்துக்கொண்டு தனது பத்தினியால் அன்பாயளிக்கப்பட்ட அமுதை உட்கொண்டு அவளையும் உண்பித்துப் பின் அவளுடனிருந்து தாம்பூலம் தரித்துக்கொண்டான். இதற்குள் பகல் 3 மணியாகிவிட்டது. முத்துக்கிருஷ்ணன் நவநீதத்தை நோக்கி "கண்மணி! மணி 3 ஆகிவிட்டது; உன் பிதா வரும்படி தெரிவித்தனரே செல்லவேண்டாமா? புறப்படுகின்றாயா!" என்றான்.

நவநீதம்.—நாதா! நான் மறந்தேவிட்டேன். சங்கரியின்வீட்டுக் குழந்தைக்கு இன்று ஆண்டு நிறைவாம். அவள் நேற்று அழைத்துவிட்டுச் சென்றாள். என் பிதாவிடம் சென்றுவிட்டால் எப்போது திரும்பி வருவோமோ தெரியவராது. ஆகையால் நான் இப்போதே சென்று வெற்றிலை பாக்கு வாங்கிக்கொண்டுவந்து விடட்டுமா! பிறகு அங்கு செல்வதால் பாதகமில்லை. அவள் வீட்டிற்குச் செல்லாவிட்டால் அவள் கோபித்துக்கொள்வாள். "நான் ஏழை; நீ பணக்காரி; அதனால்தான் வரவில்லை." என்று வருத்தமுற்றுக் கூறுவாள். என்ன செய்வது சொல்லுங்கள்."—என்று வெகு வினயமாகக்கேட்டாள்.

முத்து.—எனதன்பே! இதற்குக் கேட்கவேண்டுமோ? குழந்தைக்கு ஒன்றும் கொடுக்காமல் போவது நன்றாயிராது; 5 ரூபாய்

நோட்டையேனும் கொடுத்துவிட்டுச் சீக்கிரம் வெற்றிலைபாக்கு வாங்கிக்கொண்டு வந்துவிடு."—என்றான். உடனே நவநீதம் 5 ரூபாயை வாங்கிக்கொண்டு,கணவனிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு சங்கரியின் வீட்டிற்குத் தன்வீட்டு வேலைக்காரியுடன் சென்றாள்.

கலியாணவீட்டில் எல்லோரும் போஜனத்தை முடித்துக் கொண்டு குழந்தைக்கு அலங்காரம் செய்துகொண்டு உட்கார்ந்திருந் தார்கள். நமது நவநீதம் அத்தருணத்தில் சென்றதும் அவளைக் கண்ட சங்கரியும் அவள்வீட்டு மற்றயோரும் வெகு சந்தோஷப்பட்டு "வாருங்கள்! வாருங்கள்!! உட்காரவேண்டும்." என்று மரியாதை யாகக்கூறி ரத்னகம்பளத்தை விரித்து அதில் அமரச்செய்தார்கள்; யோகக்ஷேமங்களை விசாரித்தார்கள். நவநீதமும் தான் கொண்டு போயிருந்த 5 ரூபாயைக் குழந்தையின் கையில் கொடுத்தாள். குழந்தையை ஆசையுடன் எடுத்து மடியில் வைத்துக்கொண்டு முத்த மிட்டுக்கொஞ்சினாள். அத்தருணம் அந்த வீட்டின் தாழ்வாரத்தின் ஓர் பாகத்தில் உட்கார்ந்திருந்த இரு கிழவிகளுள் ஒருத்தி மற் றொருத்தியை நோக்கி "தங்கம்மா! இதோ வந்திருக்கும் பெண் யார்? மிகுந்த ரூபாவதியாயிருக்கிறாளே! என்ன அழகு! மகாலக்ஷ்மி போல இருக்கின்றாளே!" என்றாள்.

தங்கம்மாள்.—ரங்கம்மா! இந்தப்பெண்ணை நீ இதுவரையில் பார்த்ததில்லையா! இவள்தான் அந்தப்போலீஸ் இன்ஸ்பெக்டர் முத்துக்கிருஷ்ணனுடைய சம்சாரம் நவநீதம்மாள் என்பவள். அடாடா! அவளுடைய அழகிற்கு மற்ற பெண்களைத் திருஷ்டி கழிக்கவேண்டுமே!

ரங்கம்.—என்ன! என்ன! முத்துக்கிருஷ்ணனின் இளைய மனைவியா! இவ்வளவு அழகு இல்லாவிட்டாலும் ஏதோ சற்று சுமாராக விருந்த முதல் மனைவியை இவளுடைய அழகைப் பார்த்துத்தான் தள்ளிவிட்டானோ என்னவோ! ஐயோ! பாவம். அவள் தலைவிதி இவ்விதம் அவதிப்படும்படியாக விருக்கையில் அவளுக்கு சுகமெப் படி கிடைக்கும்? அவளுடைய போகபாக்யத்தை எல்லாம் இந்தம் மாள் அடைவதற்குப் பிறந்திருக்கையில் அவளுக்கு அதிர்ஷ்டம் எப்

படி நிலைக்கும்? பாவம்! நினைத்தாலும் வயிறு எரிகின்றது. நான் எனது உறவினர் வீட்டிற்கு ஒரு சமயம் சென்றிருந்தேன். அந்த வீட்டிற்குப் பக்கத்துவீடுதான் கல்யாணியின் தாய் வீடு. அடாடா! அந்தக்கல்யாணியின் அண்ணன் மனைவியாம் ஒருத்தியுண்டு; அவளை கொடிய நாகசர்ப்பம் என்று கூசாது சொல்லலாம். அவள் கல்யாணியை படுத்தும் பாட்டையும் அந்தப்பெண் படும் அவஸ்தையையும் நான் என் கண்ணால் கண்டேன். என்னுள்ளம் பதறிவிட்டது. இவ்விதம் அவதிப்பட்டுச் சாவதைவிட தற்கொலை செய்து கொண்டு இறந்துவிடலாம். கணவன்கீழ் வாழாத பெண் கணமும் இருத்தலாகாது. அந்தப்பெண்ணை அவளுடைய அண்ணி செய்யும் கொடுமைகளும், திட்டும் திட்டுகளும் கொஞ்சமல்ல. கண் கொண்டு காணமுடியாது. காது கொண்டு கேட்டுச் சகிக்கமுடியாது. ஐயோ பாவம்! அந்தப்பெண் மிகவும் சாதுவாகையினால் அந்த நரக வேதனையைப் பொறுத்துக்கொண்டிருக்கின்றாள்.

**தங்கம்.**—ஏண்டீ ரங்கம்! நீ சொல்வது எனக்கு ஆச்சரியமாக விருக்கின்றதே! இந்த முத்துக்கிருஷ்ணனுக்கு மூத்த மனைவியொருத்தியிருக்கிறாளா என்ன! அப்படியிருக்கையில் அவளை ஏன் தள்ளிவிட்டு வேறு கலியாணம் செய்துகொண்டான்? அந்தப் பெண்ணுக்கு என்ன தோஷம்?

**ரங்கம்.**—ஏண்டீ! நாம் என்ன தோஷத்தையும் பாபத்தையும் கண்டோம்! நமக்கென்ன உள்சமாச்சாரம் தெரியும்? தள்ளிவிட்டது தான் தெரிகின்றது. அந்தப்பெண்ணைப் பார்த்தால் மகா உத்தமியாயும் சாதுவாயுமிருக்கிறாள். அவள்மீது தோஷம் கல்பித்துத் தான் தள்ளி இருக்கவேண்டும். அவளுடைய மாமியும் நாத்தியும் மகா கொடிய விஷமிகளாம். அவர்கள்தான் ஏதோ சூழ்ச்சிசெய்து புருஷன் மனத்தை மாற்றி அவளைத் தள்ளிவிட்டதாகக் கேள்வை. உள் செய்தி எதுவோ யாரறிவார்கள்?

**தங்கம்**—ஐயோ பாவம்! ஓர் பெண்ணைத் தள்ளிவிட்டு வேறு பெண்ணைக் கொள்ளுவதென்பது மகா மோசமான காரியமல்லவா! நான் இந்தப்பெண்தான் மூத்த சம்சாரம் என்று எண்ணி இருந்

தேன். இந்தப் பெண்ணைப்போன்ற குணவதி இனி உலகத்தில் தேடினாலும் கிடைக்கமாட்டாள். அவளுடைய ரூபம் எவ்விதம் உச்சநிலையை அடைந்திருக்கிறதோ அப்படியே நற்குணமும் உச்ச நிலையை அடைந்திருக்கிறது.'' என்று இருவரும் பேசினர். இதையெல்லாம் நவநீதம் வெகு சூக்ஷ்மமாயும் கவனமாயும் கேட்டுக் கொண்டே இருந்தாள். அதனால் அவளடைந்த வேதனை அவளை அங்கே உட்காரமுடியாதபடி செய்துவிட்டது. அதை வெளியிட்டுக்கொள்ளாமல் "எனக்கு நேரமாயிற்று; போகவேண்டும்'' என்று கூறி வெற்றிலைபாக்கு வாங்கிக்கொண்டு எழுந்து தன் வீட்டையடைந்தாள். அவளுடைய மனத்தில் தாங்கவியலாத ஓர்விதமான கிளர்ச்சியுண்டாகி வதைக்கத் தொடங்கிவிட்டது. அவள் அந்த நிலைமையுடன் நேரே தன் நாதனிருக்குமிடம் சென்று கோவெனக் கதறியவாறு அவன் பாதத்தில் வீழ்ந்து "ஆ! நாதா! நான் மகா பாபி என்பதை இப்போதே உணர்ந்தேன். எனது இப்பிறவியில் என் மதிக்கெட்டியவரையில் யான் ஒருவிதமான பாபமோ, பாதகமோ, த்ரோகமோ செய்யவில்லை என்று எண்ணி இருந்தேன். ஐயோ! என்னையறியாமலே யான் பெரும் பாதகத்தை—த்ரோகத்தை—வதையைச் செய்துகொண்டே இருக்கிறேன் என்பதை இப்போதே அறிந்தேன். என் விஷயத்தில் தாங்கள் சகலவிதத்திலும் வெகு அன்யோன்னியமாக நடந்துவந்தும் முக்கியமான விஷயத்தில் என்னை பெருத்த பாபியாக்கிவிட்டதுடன் தாங்களும் பொய்யராக ஆய்விட்டீர்கள் என்பதையும் இப்போதே அறிந்தேன். தங்களை யான் இது காறும் அரிச்சந்திரனுக்குச் சமமாகவே எண்ணி இருந்தேன். இன்றுதான் தங்கள் வாயினின்றும் பொய்யான செய்தியொன்று எட்டி இருக்கின்றதென்று தெரிந்தேன். ஐயோ நாதா! ஒருவரின் இலைச்சோற்றை வேறொருவர் அபகரித்துக்கொண்டால் அது தருமமாகுமா! பெரும்பாபமல்லவா! சோற்றை வைத்துக்கொண்டு உட்கார்ந்தவர்களின் கதியும், மனமும், வயிறும், ஆத்மாவும் எவ்விதம் துடிக்கும்? அதை நினைக்கும்போதே என் மனம் வேகுகின்றதே! அச்சோற்றை அபகரித்தவர்கள் புசித்தால் ஒவ்வொரு சோறும் ஒவ்வொரு ஈட்டிபோல வயிற்றில் குத்தாதா! மற்றும் ஒவ்வொரு சோறும் ஒவ்வொரு மூட்டையான

பாபமாக மாறி தின்றவர்களைத் தொடர்ந்து வதைக்காதா!" என்று திடீரென்று நவநீதம் மேலும் ஏதோ சொல்வதற்குள் இதைக்கண்ட முத்துக்கிருஷ்ணன் "ஆகா! இதென்ன விபரீதமாகவிருக்கின்றதே கலியாணவீடுசென்று வந்தவள் திடீரென்று இவ்விதம் ஏதேதோ சொல்லவும் புலம்பவும் காரணம் என்ன?—...........ஒருவேளை இவளறியாதிருக்கும் கல்யாணியின் செய்தி இவளுக்கு ஏதேனும் தெரிந்துவிட்டதா? இவள் கூறும் மொழிகளிலிருந்து அப்படித் தானிருக்குமென்று தோன்றுகின்றது. அடாடா, கஷ்டகாலமே!" என்று எண்ணியவனாய் நவநீதத்தை வாரியெடுத்து மடிமீது போட்டுக்கொண்டு அவளை நோக்கி "கண்மணி! நவநீதம்! இதென்னவிது திடீரென்று உன்மத்தங் கொண்டவள்போல ஏதேதோ கூறுகின்றனையே! காரணத்தை விளக்கிக்கூறுவாய்." என்று வெகு பக்ஷத்துடன் கேட்டான்.

இதைக் கேட்ட நவநீதம் வெகு விசனத்துடன் பேசத் தொடங்கி "நாதா! எனக்கு உண்மையில் உன்மத்தமே பிடித்துவிடும் போலிருக்கிறது. தாங்கள் இனியேனும் உண்மையை ஒளிக்காது உரைத்தல் வேண்டும். தாங்கள் அடியாளை மணம் புரிந்து கொண்டகாலத்தில் தங்களுடைய மூத்த மனைவி இறந்துவிட்டதாக வல்லவா எங்களிடம் உங்கள் வீட்டார் கூறினார்கள். தாங்களும் இரண்டொரு சந்தர்ப்பத்தில் அவ்விதமாகவே தெரிவித்தீர்கள். அந்த விஷயமாகச் சம்பாஷணையைத் தொடங்கினால் அதை வேண்டாமென்றுத் தாங்கள் மறுத்துத் தடுத்துவிடுவதுடன் அவற்றைப் பற்றிப் பேசத் தமக்கு விருப்பமில்லை என்றும் கூறிவிட்டதால் யானதைப் பற்றிப் பிரஸ்தாபிக்காதிருந்துவிட்டேன். அந்தப் பொய்யான கட்டுக் கதையின் உண்மை இப்போதல்லவா எனக்கு வெட்ட வெளியாகியது. தங்களுடைய மனைவி உயிருடனிருக்கிறார்களாமே! அவர்கள் உயிருடன் இருக்கையில் எக் காரணம் பற்றி இறந்துவிட்டதாகக் கதை கூறி மறுமணம் செய்துகொண்டீர்கள்? இதன் முக்கியமான காரணத்தை யான் அறியவேண்டும்; ஒன்றையும் ஒளியாது எனக்குரைத்துத் தான் தீரவேண்டும். இல்லையேல் யான் தீராத துயரத்தை யடைவேன். இவ்விஷயத்தில் தாங்கள்

உண்மைக் காதலியாக என்னை எண்ணி யிருக்கும் பக்ஷத்தில் உண்மையை ஒளிக்காது உரைக்கவேண்டும்." என்று வெகு பிடிவாதம் செய்து புலம்பிய வண்ணம் கேட்டாள்.

நவநீதத்தின் அப்போதிய துயரத்தையும் அவளுடைய மனோ நிலைமையையும் வெகு எளிதில் உணர்ந்துகொண்ட முத்துக் கிருஷ்ணன் இனியும் நாம் வாளாவிருந்தால் நம் கண்மணியின் மனம் பெரு விசனத்தினுல் வெதும்பிவிடும்; ஆகையால் உள்ளவற்றையொளியாது உரைத்திடுதல் நலம். இனிமேல் கூறாதிருந்தால் அவள் நம்மை விட்டுப் போவதில்லை" என்று தனக்குள்ளாக எண்ணியவனுய் நவநீதத்தை நோக்கி "என் அன்பிற் கினியாளே! என் மகிழ்ச்சிக்குத் துணையாளே! உனது மனம் தற்போதுள்ள நிலைமை முற்றும் யானறிவேன். யான் உன்னிடம் எப்போதும் பொய்யுரைத்தவ னன்று. மூத்த மனைவி இறந்துவிட்டதாக யான் கூறியது உண்மையே! அவளுடைய உயிருக்கு மேலான கற்பும் சீலமும், ஒழுக்கமும் இறந்து பட்டொழிந்தன. அவைகளைப் பறிகொடுத்த அந்தப் பெண் உயிரிருந்தும் சவம்போல் ஆவாளே யன்றி மற்றபடியாக மாட்டாள். அவற்றைக் கருத்தில் கொண்டு தான் அப்படிக் கூறினேன். இதில் தவறுதல் யாது? என்று மெல்லக் கூறினுன்.

நவநீதம் :—நாதா! அந்தம்மாள் தாங்கள் கூறியபடி கற்பை இழந்தவள் என்று எவ்விதம் தாங்கள் நிச்சயமாய்க் கூறலாம்? அந்தம்மாள் அன்னிய மனிதனுடன் உல்லாசமாக விருக்கையில் தாம் கண்ணுரக் கண்டீர்களா! அன்றிப் பிறர் சொல்லிக் கேட்டு அனுமானத்தின் மீது நீங்களும் கூறுகின்றீர்களா! மேலும் அவர்களுக்கோர் குழந்தையு மிருக்கின்றதாமே, அந்தக் குழந்தைக்குத் தாம் பிதா வல்லவா! அது விஷயங்களை விளக்கிக் கூறுங்கள்.

முத்து:—கண்ணே! நவநீதம்! வருடக் கணக்கிலாகிவிட்ட பழய கதைகளையெல்லாம் ஆதி யோடந்தமாகக் கூறுவதற்கு எனக்கு நினைவில்லை. அதோடு அந்த விஷயங்களை இப்போது கூறுவதற்கும் வெட்கமாயிருக்கின்றது ; ஏனெனில் என்மீதே

மடைமைத் தனமாகக் கேட்போருக்குத் தோன்றலாம்; ஆயினும் நீ அவற்றைக் கேட்பதனால் நினைவிருப்பதைக் கூறுகின்றேன். என் பெற்றோர்கள் என்னை சம்ரக்ஷிக்கக் கூடிய நிலைமையிலில்லாது வறுமையால் கொடுமைப்பட்டு வந்தார்கள். அன்றாடு போஜனத்திற்கு அவதிப்பட்டு வந்தோம். வறுமையின் கொடுமையால் எனது தமக்கையை வயது நிறைந்த வயோதிகன்—50 வயது கிழவன், தனம் படைத்த கிழவனுக்கு—மணம் செய்து வைத்தார்கள். அந்த வயோதிகனின் பாதுகாப்பிலும், என் தமக்கையின் அதிகாரத்திலும் நாங்கள் பிழைக்கலாயிற்று. என் தமக்கையின் உத்தரவிற்கு இரண்டாவது கூறுவதற்கும் ஆதீன மின்றி யான் வளரலானேன். கல்வி கற்பதில் வெகு ஆவலைக் கொண்டேன். எனக்கு அப்போது சிபார்சு செய்யவும் மனிதரில்லாமையால் இலவசப் படிப்பிற்கு யான் அருகனாக ஆகவில்லை. என் தமக்கையின் பணத்திலிருந்து யான் படிக்க ஆவல் கொண்டவனாய் அவளை வெகுவாய் மன்றாடிக் கேட்டதில் அந்தம்மாள் தனது இஷ்டப்படியும், தான் கூறிய வாக்குக்கு மறு வாக்கின்றியும் நடப்பதாக வாக்குறுதி செய்தால் என்னைப் படிக்க வைப்பதாகக் கூறினாள். எனக்குப் படிப்பின் மீதிருந்த வேட்கையாலும் அப்போது சிறு பிராயத்தின் அறியாத் தன்மையாலும் அதற்கு ஒப்புக்கொண்டு வாக்குறுதி செய்துவிட்டேன். பிறகு என்னைப் படிக்க வைத்தார்கள். யான் மேட்ரிக்குலேஷன் படிக்கையில் எனக்குக் கல்யாணத்தையும் செய்துவைத்தார்கள். அச்சமயம் யான் எனது படிப்பின் மீது நோக்கமாக விருந்தேனே யன்றி மற்றவற்றைக் கவனிக்கவில்லை. மேலும் விவாகத்தில் என் மனம் சற்றும் நாடவு மில்லை; எனினும் எனது தமக்கையின் உத்திரவை மீறி நடக்க சக்தி யற்றவனாயிருந்தமையால் எதற்கும் பொம்மை போல பேசாதிருந்துவிட்டேன். விவாகமான மறுவருஷமே பெண்ணை வீட்டிற்கு அழைக்க ஏற்பாடு செய்தார்கள். அதற்கு மட்டும் யான் சற்று மயங்கினேன். ‘இப்போது வேண்டாம்; பிறகு பார்த்துக்கொள்வோம்’ என்றேன். இதைக்கேட்ட என் தமக்கைக்குக் கோபம் வந்துவிட்டது “அடே முத்து! நீ இன்றே என் வீட்டை விட்டுப் போய்விடு. இதுகாறும் உனக்கு, நான் செலவிட்ட பணத்தைக் கீழே வை.” என்று அவள்

அட்டகாசம் செய்ததைக் கண்டு பயந்துவிட்டேன். அப்போது நான் உலக வியலே தெரியாத சாதுவாயும், பேதையாயு மிருந்தேன். தாம்பத்திய விஷயத்தின் அன்பே எனக்கு உதிக்கவில்லை. அக்கா வின் வாய் மொழிக்கு ஒருக்காலும் இடையூறு சொல்லலாகா தென்ற ஓர் உறுதியை மட்டும் கொண்டிருந்தேன். அக்காவின் கடு மொழிக்கு அஞ்சினேன்; படிப்பும் போய்விடப் போகின்றதே என்ற பயத்தினால் ஒத்துக்கொண்டேன். பிறகு பெண்ணை வீட்டிற் கழைத்தார்கள். அந்தப் பெண் சாதாரண அழகுடையவள் தான். அவளை வீட்டிற் கழைத்து இரண்டொரு மாதத்திற் கெல்லாம் என் தமக்கையின் புருடரான கிழவர் உயிர் நீத்தார். அந்தச் சம்பவத் தினால் என் தமக்கைக்கு அந்தப் பெண்ணினிடத்தில் பெருத்த ஆத்திரமும், அசூயையும், வெறுப்பும் உண்டாய்விட்டன. ஏனெனில் அந்தப் பெண் வீட்டுக்கு வந்த வேளை தனது புருஷன் இறந்துவிட் டதாக எண்ணிவிட்டாள். அதனால் அந்தப் பெண்ணை வெகு இம் சைகள் செய்தாள். இந்த காரணத்தை நான் பிறகே அறிந்தேன். அப்போது நான் எனது படிப்பைத் தவிர வேறு ஒன்றையும் கவனிப்பதில்லை. அந்தப் பெண்ணும் என்னிடம் நடந்துகொண்ட மாதிரியில் குணமுடையவள் தான் என்று எண்ணினேன். எனக்கு வயதும் அப்போது அதிகம் ஆகவில்லை யாதலால் எனக்கு அவ ளிடத்தில் அதிகமான காதலும் உண்டாக வில்லை. எனினும் சாதாரணமாக யான் நடந்துவந்தேன். நான் பி. ஏ. பரிக்ஷைக்குப் படிக்கத் தொடங்கினேன். என் தமக்கையால் தனக்கு துன்பங்கள் நேருவதாக அந்தப் பெண் என்னிடம் கூறுவாள். ஆனல் யானதைக் கேட்டும் அதற்காக ஒன்றும் செய்ய வியலாது, பொறுமையாக விருக் கும் படிக்குக் கூறி வந்தேன். இதற்கு மத்தியில் வீட்டில் 3 ஆயிரம் ரூபாயிக்குச் சொத்து களவுபோய்விட்டது. 'இந்தப்பெண்வந்த கால்வாசிதான் இப்படியாயிற்று' என்று எல்லோரும் எண்ணி அவளை முன்னினுமதிகமாய் உபத்திரவம் செய்யத் தொடங்கினர்களாம். இதையும் பின்னரே நான் அறிந்தேன். அந்தப் பெண்ணின்நடத்தை சரியில்லை என்பதை என் தமக்கை என்னிடம் பலகாலும் கூறத்தொடங்கினள். யான் அதைக் கவனிக்கவில்லை. என் தமக்கை ஒரு தினம் அந்தப் பெண்ணுக்கு வந்திருந்த

சில கடிதங்களைக் காட்டினாள். அதைக் கண்டதே யான் அபரிமிதமான கோபத்தையடைந்து அந்தப் பெண்ணையே அழைத்துக்கேட்டேன். அவள் தனக்கு ஒன்றும் தெரியாதென்றும் இது ஏதோ சூதென்றும் கூறிவிட்டாள். எனக்கப்போது பி. ஏ. பரீக்ஷை தினம்; யான் அவசரமாகக் கலாசாலைக்குப்போய்விட்டேன். பிறகு நான் சாயந்திரம் திரும்பி வருகையில் என் தமக்கை அலறிக்கொண்டே, அந்தப்பெண் எவனோ ஒரு மொட்டைப்பையனுடன் போய்விட்டதாகத் தெரிவித்தாள். என்னுடைய மனமும் அப்போது மிகுந்த குழப்பத்தை யடைந்திருந்தமையால் "சனி தொலையட்டும்" என்று பேசாதிருந்துவிட்டேன். பிறகு அந்தப்பெண் தன்னையழைத்துக்கொள்ளும்படிக் கடிதமெழுதினாள்; பிறரிடம் சொல்லியனுப்பினாள்; தானே நேரில் வந்து கேட்டாள்; என் மனம் கலைந்து முறிந்துவிட்டதால், நான் மறுத்துவிட்டேன். அந்தப் பெண் தன் தாய்வீடு சென்று ஒன்றரை வருடங் கழிந்து அவளுக்கோர் பெண்குழந்தை பிறந்ததைக் கேட்டதும் நான் உயிரை இழந்தவனானேன். பின் அவளுடைய துஷ்டத்தனம் உண்மை என்பது ஊர்ஜிதமாய்விட்டது. அந்த வெட்கக்கேட்டைப் பற்றி எனக்குத் தெரிந்தவர்களெல்லாம் என்னைக் கேட்கத் தொடங்கினார்கள். அந்த அவமானம் தாங்காமல் யான் வெளியூருக்குச் சென்றுவிட்டேன். பி. ஏ. பாஸ் செய்தபிறகு வேலைக்குப் பிரயத்தனம் செய்ததில் போலீஸ் ஆபீஸில் வேலை கிடைத்தது. அக் காலத்தில் ஆபீஸின் விஷயமாக நான் உன் பிதா இருக்கும் ஊருக்குச் சென்ற தருணம் உங்கள் வீட்டிலேயே இறங்க நேர்ந்தது. அவ்வமயம் நீ மகா கொள்ளைக்காரியாக இருந்து என் உயிர், பொருள், ஆவி மூன்றையும் கொள்ளை யடித்துவிட்டதால் யான் உன்மேல் கடுங் கோபம் (கடுங் காதல்) கொண்டு உன்னைப் பழிக்குப் பழி வாங்கும்பொருட்டு உன்னையே யான் கொள்ளை யடித்துக்கொண்டேன். கண்மணி! நவநீதம்! அந்தப் பெண் தாய் வீடுபோய்ச் சேர்ந்தபிறகு எனது தமக்கையின் குற்றங்களையும் பெண்ணின் நற்குணத்தையு மறிந்து யானே சற்று யோசித்தேன். அந்தப் பெண்ணை மீண்டு மழைக்கலாகுமா! என்று எண்ணினேன். அவள் கர்ப்பமான செய்தியை அறிந்த பின்னர் அந்த எண்ணத்தையும், அவளையும் அறவே

மறந்து அவள் இறந்துவிட்டதாகவே இன்று வரையில் தீர்மானித்து விட்டேன். என்னுடைய இன்பத்திற்குத் துணையாக உன்னை யானடைய வேண்டிய ப்ராப்தத்தைக் கடவுள் எனக் களித்திருக் கையில் யான் வேறு பெண்ணை ஏன் கண்ணெடுத்துப் பார்க்க வேண்டும்? எனது தமக்கை இயற்கையிலேயே துற்குணி என்பதைப் பிறகு தெரிந்துகொண்டேன். அதனால் தான் அவளிடம் உன்னை வைக்கலாகாதென்று தீர்மானித்து தனியாக இந்த ஊருக்கு வேலையை மாற்றிக்கொண்டு வந்துவிட்டேன். ஏதோ கடவுளின் அருளால் இந்தப் பதவியும் கிடைத்தது. போதுமா என் கதை!" என்று வெகு வாஞ்சையோடு கேட்டான்.

இதைக் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்த நவநீதம் விசன கரமான தோற்றத்துடன் பேசத் தொடங்கி "நாதா! கதை வெகு அழகாகவே இருக்கின்றது. தாங்கள் கூறிய விஷயத்திலிருந்து தப்பிதம் முற்றும் தங்கள் மீது தான் என்று யான் கூறுவேன். தங்க ளுடைய படிப்பில் தங்களுடைய கவனமும் ஆவலும் நிறைந்திருந் ததுபோல தங்களை நம்பியிருந்த பெண்ணின்மீது ஒரு கண் இருக்க வேண்டாமா! அவ்விதம் மூடத்தனமாக தமக்கை கூறியதை தம்பி கேட்டு ஒருயிரை வதை செய்தது மிக்க புண்ணியம் இல்லையா! என்ன சொல்வது அவ்விநோதத்தை! என்மீது கோபிக்கவேண்டாம். தம்முடன் கூடப் பழகும் ஒரு பெண்மணியின் நடத்தையைத் தாம் நன்குணர்ந்து அதில் தோஷ மிருப்பதாகக் கண்ட பின்னர் தாம் அந்தம்மாளைத் தள்ளுவது முறையா! அன்றித் தமக்கையின் வார்த்தையாலும் செய்கையாலும் இவ்விதம் செய்தது ஒழுங் காகுமா? அந்தம்மாளிடத்தில் எனக்குச் சிறிதும் சந்தேகமே தோன்றவில்லை. அவர்கள்மீது வேண்டுமென்று உங்கள் தமக்கை செய்த விதிகளினால் அவர்கள் கதி அவ்விதமானதே யன்றி அவர் களைப் பழிப்பது சரியே யன்று. காதலரே! அந்தம்மாள் குழந் தையை ஈன்ற பின்னர் ஒன்றரை வருடங் கழித்துத் தமக்கு செய்தி எட்டியதா, அல்லது குழந்தையே ஒன்றரை வருடங் கழித்துப் பிறந்ததா! இதன் உண்மையைத் தாமறிவீர்களா!" என்று கேட்டாள்.

முத்து—பேஷ்! நவநீதம் நீ கேட்பது எனக்கு அபாரமான வியப்பைத் தருகின்றது. அவள் எங்கள் வீட்டை விட்டுச் சென்ற ஒன்றரை வருடங் கழிந்து ஓர் பெண் மகவு பிறந்ததாம்; இப் போது சரிதானு! இனியும் ஆக்ஷேபனை யுண்டா! நான் தான் முதலி லேயே தெரிவித்தேனே! எனது அறியாமையும் சற்றுச் சேர்ந்தது என்று; இனிமேல் அதைப் பற்றி பேச்சேதற்கு? நீ உன் தந்தை வீட்டிற்குச் செல்லவேண்டாமா ?

நவநீதம்:—நாதா! அதைப் பற்றி ஏன் பேசலாகாது ? எனக்கு இன்னமும் சந்தேகமாகத்தானிருக்கிறது. இவ் விஷயத்தில் யானே சென்று விசாரித்துக்கொண்டு செய்தி யறிந்தால் தான் நம்பிக்கை யுண்டாம். இப்போது அந்தம்மாள் எங்கிருக்கிருர்கள் ? தெரிவித்தால் நான் அதை அறியவேண்டிய முயற்சிகளைச் செய் வேன். என் மனம் சமாதான மடையவில்லை.

முத்து:—அடாடா! இதென்ன பயித்தியமாய்விட்டாயே! கை விட்டு உடைந்துபோன சட்டியை ஒட்டவைப்பதும் உண்டா! பேஷ்! நீயாவது சென்று விசாரிப்பதாவது! வெகு அழகு! உலகத்தில் இளையவள் மூத்தவளைக் கண்டால் பொருமை யல்லவா கொள் வாள் ? அதை விடுத்து அவளிடம் அனுதாபப்பட்டு ஆகாத்தியம் செய்கிருயே, இதென்ன விந்தை! நீ இவ்விஷயத்தில் தலையிடாதே. இதனுல் ஒரு விதமான பிரயோஜனமும் உண்டாகாது. வீணை எண்ணத்தை விட்டுத்தள்ளு.

நவநீதம் :—ப்ராணகாந்தா ! அந்தம்மாள் என்னவோ குற்ற மற்ற நிரபராதி என்றே என் மனத்தில் என் மனச்சாக்ஷி கூறுகின் றது. நிரபராதியாயுள்ள அவர்கள் தவிப்பதும் அவர்களுடைய போக பாக்யத்தைக் கொள்ளை கொண்டது போல யான் அபகரித்துக் கொண்டு மகிழ்வதும் ஒழுங்காகுமா ! அவர்கள் வயிறு எரிந்தால் நான் அப்படியே எரிந்து விடமாட்டேனு ! இது கடவுளுக்குத்தான் ஒப்புமா! அந்தம்மாளுக்கு யான் சத்ருவாக வந்திருக்கையில் எனக்கு அவர்கள் மீது ஏன் பொருமை உண்டாகவேண்டும்? என் மேலல்லவா அவர்களுக்குப் பொருமை பிறப்பது சகஜம் ! ஐயோ ! எனக்கதை

எண்ணும்போது என் மனம் எரிகின்றதே! ஹ்ருதயம் வெடித்து விடும்போலிருக்கின்றதே! என்ன செய்வேன்? நாதா! காரியம் தான் வீணே நாசமாய்க் குட்டிச் சுவராய் விட்டது; இனிமேலாவது அந்தம்மாளின் ஜீவனத்திற்கும், குழந்தையின் போஷணைக்கும் தர்மார்த்திற்காகவாவது உபகாரம் செய்து பொருள் கொடுக்கலாகாதா? அதையேனும் செய்தால் தான் என் மனம் சற்றுச் சாந்தமடையும். இனிமேல் மாதா மாதம் 25 ரூபாய் அவர்களுக்கு அனுப்புங்கள். இவ்விதம் செய்தால்தான் இனிமேல் நான் நல்லுணவு உட்கொள்வேன்; இல்லையேல் பழய அமுதையே உண்டு களிப்பேன்.

முத்து:—கண்மணி! உன்னுடைய நற்குணத்திற்கும், ஒழுக்கத்திற்குந் தான் உலகில் மழை பெய்கிறதென்று யான் கூறுவேன். கண்மணீ! இத்தனை வருடமாக அறவே மறந்துவிட்டவளை இனித் தேடுவதும், பொருளளிப்பதும் எங்கேனும் ஒப்புமா! மேலும் ஐயாயிரம் ரூபாய் பெறுமான நகைகளுடன் தான் அவள் ஓடியிருக்கிறாள். அதையே அவளுக்கு ஜீவனும்சமாகவும் எடுத்துக் கொள்ளும்படியாக ஏற்பாடுமாகி விட்டது. இனிமேல் இந்த விஷயத்தைப் பற்றிப் பேச்சே வேண்டாம். அதுவிஷயமாக நாம் இனி எது செய்தபோதும் பரிகஸிப்பதற்கு இடமாகும்; அந்த யோசனையை விட்டுவிடு. மணி 6 ஆகிவிட்டதே! நீ இந்த தர்க்கத்திலிருந்தால் உன் தந்தை இல்லம் செல்லவேண்டாமா! உம் புறப்படு. பிறகு பேசிக்கொள்வோம்" என்று கூறியவாறு எழுந்துவிட்டான்.

அதற்குமேல் பேச முடியாமல் நவநீதம் எழுந்து, தன் தந்தை வீட்டிற்குப் புறப்படலானாள். மாலைப் பொழுதாகையாலும், மந்த மாருதம் சிலு சிலு என்று வீசியதாலும் இருவரும் கால் நடையாகவே நடந்துசெல்லத் தொடங்கினார்கள். நவநீதத்தின் மனமட்டும் குழப்பத்திலிருந்து மாறுபடாமல் தத்தளித்துக்கொண்டே இருக்கின்றது. "இவ்விஷயத்தைத் தன் தந்தையிடத்தில் கூறி உண்மையை அறியலாமா?" என்று எண்ணியபடியே சென்றுகொண்டிருக்கிறாள்.

---

## 10-வது அதிகாரம்.

### அன்புடையாரென்பு முரியர் பிறர்க்கு

மனோன்மணி வெகு துணிகரமாகக் கத்தியைத் தன் மார்புக்கு நேராக நீட்டிய கோர சம்பவத்தைக் கண்ட சிதம்பரத்தின் மெய் நடுங்கிவிட்டது. அவனுடைய அப்போதைய நிலைமை விளக்கிக் கூற இயலாததென்றே சொல்லலாம். "ஐயோ! தன்னைத் தானே குத்திக்கொண்டு நம்மை மீளாத பழிக்கு ஆளாக்கி விடத் தீர்மானித்து இவ்விதம் செய்யத் துணிந்துவிட்டனளே! ஐயோ! இந்த ஆபத்திற்கு என் செய்வேன்?" என்று பதறியவாறு சரே லென்று பாய்ந்து மனோன்மணியின் இரு கரங்களையும் பற்றிக் கொண்டு "ஆகா! என்னருமைத் தாயே! வேண்டாம்; அநாதை என்னை ஆபத்திற் குள்ளாக்க வேண்டாம்; அந்தக் கத்தியால் என்னைக் குத்தி விடுங்கள்; யான் மெத்த களிப்புடன் சித்தங் களித்து உத்தமமான உயிரை விட்டு அத்தன் திருவடியில் சுத்த மாய்ச் சேர்த்துவிடுவேன். தாங்கள் வீணான மோக மென்னும் பைசாசத்தை விரட்டியோட்டி உங்கள் பர்த்தாவின் ஆதரணையில் அடங்கி இருங்கள்" என்று கூறி மண்டியிட்டு வணங்கினான்.

சிதம்பரம் தன் கரத்தைப் பற்றியவுடனே மனோன்மணி பேரானந்த சுகத்தை யனுபவிப்பது போல மெய்ம் மறந்தவளானாள். ஆகையினால் அவன் மண்டியிட்டிருக்கும் சமயம் அவனை அப்படியே இழுத்து அணைத்துக்கொண்டு "என் இன்ப வெள்ளமே! தாங்கள் ஏன் என்னை வணங்கவேண்டும்? என்னை வணங்காது எனக்கு இணங் கினால் போதும். அதற்குப் பிணக்கு செய்துவிட்டு என்னை கொல்லாமலே வதை செய்யலாகுமா! அந்தக் கிழவனின் வார்த் தையை இனிமேல் எடுக்கவேண்டாம்; நீர் எனது வார்த்தைக்கு இரண்டகம் சொல்லாது என்னுடன் கிளம்பும். இல்லையேல் உம்மை யான் இலேசில் விடமாட்டேன்" என்று மிகுந்த ஆவேசத் துடன் கூறினாள்.

182856

இந்த எதிர்பாராத ஆபத்திற்குட் பட்ட சிதம்பரம் வெகு ப்ரயாசையுடன் தன்னை அவளுடைய பிடியினின்றும் விடுவித்துக் கொண்டதுடன் அவள் கையிலிருந்த கத்தியை வெடுக்கென்று பிடுங்கிக்கொண்டான். அதே தருணத்தில் கூடத்தில் படுத்திருந்த ஏமாவதி அலறியவாறு கூச்சலிட்டு "ஆ! அப்பா! மாமா! எனக்கு பயமாக விருக்கின்றதே! என் கண் முன் ஏதோ உருவங்கள் தெரிகின்றவே! ஐயோ! அப்பா!" என்று கத்தினாள். அவளுடைய கூச்சலைக் கேட்ட அவள் தந்தை பதை பதைத்த வண்ணம் ஏமாவினருகில் சென்று அவளைத் தன் மடி மீதில் போட்டுக்கொண்டு "கண்மணி! ஏமாவதி! என்னம்மா! ஏன் அலறினாய்! ஏதேனும் துற்சொப்பனம் கண்டாயா! இதோ நான் உன் பக்கலிலேயே இருக்கிறேன். மாமாவைக் கூப்பிடட்டுமா! என்று "சிதம்பரம்! சிதம்பரம்!" என்று உரத்த குரலால் கூவினார்.

ஏமாவதி அலறிய குரலைக் கேட்ட உடனேயே மனோன்மணிக்கு நடுக்க முண்டாகிவிட்டது. அவள் சிதம்பரத்தை நோக்கி "ஐயோ! அந்த ஏமாவதி முண்டை நாசமாய்ப் போக! அவளுக்குச் சாவு வராதா! அவள் தொலைந்தால் தான் நாம் சுகப்படலாம். சிதம்பரம்! இந்தச் செய்தி வெளிவருமாயின் நீ படும் பாட்டைக் கடவுளு மறியமாட்டார்; ஜாக்ரதை" என்று கூறி முடிக்குமுன் சிதம்பரத்தை உபாத்தியாயர் அழைப்பதையும் கேட்டுவிட்டாள். உடனே அவள் அவ்விடத்தை விட்டு மெல்ல நழுவி தன்னறைக்குப் போய்விட்டாள். தான் கொணர்ந்த கத்தியைத் திருப்பி எடுத்துக் கொண்டு போவதையும் அந்தச் சமயம் மறந்துவிட்டாள்.

சிதம்பரம் தன்னை யழைத்த குரலைக் கேட்டவுடன் மிகவும் வருத்த மடைந்தவாறு கூடத்தை நோக்கிச் சென்று "இதோ வந்துவிட்டேன்" என்று கூறிக்கொண்டே அருகில் சென்று நின்றான். இவன் வந்ததைக் கண்ட உபாத்தியாயர் "அப்பா! சிதம்பரம்! ஏமா ஏதோ துர்ச் சொப்பனங் கண்டு அலறி யழுதாள். உன்னை யழைத்தாள்; அதனால்தான் கூப்பிட்டேன். அம்மா, ஏமாவதி! இதோ மாமா வந்திருக்கிறான் பாரு; உனது காதலன் வந்துவிட்டான் பாரு" என்று கூறினார். அத்தருணம் தற்செயலாகக் கண்

விழித்துக்கொண்டு வருபவள் போல மனோன்மணி அவ்விடத்திற்கு வந்தாள். தான் எதையு மறியாதவள் போல அபிநயித்து "என்ன! என்ன! என் ஏமாவதிக்கு எப்படி இருக்கிறது?" என்று கேட்டாள்.

இந்தக்கபட நாடகத்தைக்கண்ட சிதம்பரத்தின் மனம் கொதிக்கின்றது. அவளால் சகிக்கக்கூடாத சங்கடத்தை யடைந்து அவன் தத்தளிக்கின்றான். அவள் முகத்தைப் பார்ப்பதற்கும், அவள் பேசுவதைக்கேட்பதற்கும் அவனுக்குப் பிடிக்கவில்லை. "அவளுடைய கபடத்தை நமது குருவினிடம் எடுத்துரைத்துவிடலாமா!" என்று எண்ணுகிறான். அவ்வாறு எண்ணும்போது மனோன்மணி சற்று முன்கூறிய செய்தி அவன் நினைவிற்கு வந்து அதைத் தடுக்கின்றது. "எனக்கு எத்தகைய துன்பத்தைச் செய்தாலும் சம்மதமே! எனது உயிரினும் இனிய ஏமாவதியையும், என் குருவையும் கொன்றுவிட்டாளேயானால் என்ன செய்வது?" என்ற யோசனையினால் பேசாதிருந்துவிட்டான். மனோன்மணி கேட்ட கேள்விக்கு உபாத்தியாயரே பதில் கூறத்தொடங்கி "ஏதோ துர்ச் சொப்பனங்கண்டு கத்தினாள்," என்று கூறினார். மனோன்மணி சற்று அங்கு நிற்பது போல நின்று மறுபடியும் தன்னறையில் சென்று படுத்துக் கொண்டாள்.

ஏமாவதி சிதம்பரத்தை நோக்கி வெகு பக்ஷத்துடன் பேசத் தொடங்கி "மாமா! தாங்கள் இங்கேயே இருங்கள்; இவ்விடத்திலேயே படுத்துக்கொள்ளுங்கள்" என்றாள். சிதம்பரம் அவளுடைய வார்த்தைக்கு இணங்கி "அம்மா! நான் தூங்கவில்லை. இவ்விடத்திலேயே உட்கார்ந்திருக்கிறேன். நீ நிம்மதியாக நித்திரை செய் என்று தேற்றிவிட்டு அவ்விடத்திலேயே உட்கார்ந்திருந்தான்.

அன்று இரவு முற்றும் ஏமாவதி சரியானபடி நித்திரையே கொள்ளாது அலற்றியவாறு இருந்தாள். பொழுதும் புலர்ந்தது. மருத்துவன் வந்து மருந்துகொடுத்துச் சென்றான். அன்று அவ்வீட்டில் மனோன்மணி இடும் அன்னத்தைப் புசிக்க மனம் வாராத சிதம்பரம் தான் என்ன செய்யலாம் என்று யோசனை செய்தபடியே

இருந்தான். அவனுக்கு ஒன்றுமே தோன்றாமையால் மனந்துடித்த வாறு சகிக்கொணாத வேதனையுடன் விசனமே நிறைந்த வதனத் தினனாய் ஒரு புறம் உட்கார்ந்தான்.

உபாத்தியாயருக்கோ தனது உயிரினுமினிய ஏமாவதியைத் தனிமையில் விட்டுச்செல்வதற்கு மனம் சம்மதிக்கவில்லை. ஆகையால் பல் தேய்ப்பதற்கும் எழுந்து செல்லாது புதல்வியின் பக்கலை விட்டு அகலாது வாடிய முகத்துடன் உட்கார்ந்திருந்தார். அவருடைய மனக்கவலையும் துக்கமும் அளவிடற்பாலனவல்ல. ஏமாவதியின் நிலைமையோ அவரை உருக்கிக் கருக்குகின்றது. அவர் சற்றும் அன்னாகாரத்தை விரும்பாது அன்று பகல் மூன்று மணிவரையிலிருந்தார்; எனினும் சிதம்பரத்தை மட்டும் போஜனம் செய்யும் படியாகப் பலதரம் கூறினர். அவனும் ஏற்கெனவே யோசித்துக் கொண்டிருந்ததற்கு அனுகூலமாய்த் தனது உபாத்தியாயர் சாப்பிடாதிருப்பதை உத்தேசித்துத் தானும் பட்டினிகிடப்பதாகக் கூறுவதற்குப் பொருத்தமாய்விட்டதால் 'தாங்கள் புசித்தாலன்றி யான் புசியேன்' என்று கூறிவிட்டான். மனோன்மணி சிதம்பரத்தை வெகு பக்ஷத்துடன் போஜனத்திற்கு வரும்படி உபசரித்தழைத்தாளே யன்றித் தன்னாயகனை யழைக்கவில்லை. மாலை 4 மணியாயது.

உபாத்தியாயர் சிதம்பரத்தை யழைத்து "அப்பா சிதம்பரம்! ஏமாவதி அலறுவதைப் பார்த்தால் ஏதோ பயந்திருப்பதாகத் தோன்றுகின்றது. ஆகையால் நமது மந்திரவாதிப் பெரியவர் இருக்கிறாரே! அவர் வீட்டிற்குக் குழந்தையை அழைத்துச்சென்று விபூதிபோட்டுக்கொண்டு வரலாம் என்று எண்ணுகிறேன். ஆகையால் ஓர் வண்டி பேசிக்கொண்டுவா!" என்று உத்தரவிட்டார்.

குருவாக்கைச் சிரசாவகித்த சிதம்பரம் மறு பேச்சின்றிச் சென்று ஒரு வண்டி கொண்டுவந்தான்; அதைத் தன் குருவினிடம் தெரிவித்தான். அவர் வண்டியில் ஓர் ஜமுக்காளத்தை விரித்துத் தலையணையைப்போட்டு ஏமாவைத்தூக்கி அதிலே படுக்கவைத்துக் கொண்டு சிதம்பரத்தையும் கூட அமரச்செய்து தானும் ஏறிக் கொண்டு வண்டியைவிடச் செய்தார். வண்டிக்காரனிடம் ஓர் அடை

யாளத்தைக்கூறி அந்தவிடத்தில் நிறுத்தும்படிச் சொல்லிவைத்தார். வண்டியில் ஒருவருடன் ஒருவர் பேசாது எல்லோரும் மவுனமாகவே சென்றார்கள். வண்டி வெகுநேரஞ்சென்ற பிறகு ஓர் கட்டிடத்தின் வாயிலில் நின்றது. வண்டியினின்றும் உபாத்தியாயர் இறங்கி ஏமாவை எடுத்துக்கொண்டு உள்ளே சென்று சிதம்பரத்தை ஜமுக்காளம் போடும்படியாகக் கூறி அதில் அவளைக்கிடத்திவிட்டு வண்டிக்காரனுக்குச் சத்தத்தைக்கொடுத்து அனுப்பிவிட்டார்.

சிதம்பரம் அவ்விடத்தையும் அக்கட்டிடத்தையும் உற்றுக்கவனித்தான்; அவனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. அவ்விடத்தில் மனித சஞ்சாரமிருப்பதாகவும் தெரியவில்லை; இல்லைபோலும் தோன்றவில்லை. எங்கு பார்த்தாலும் எருக்கஞ்செடியும், பருக்கைக் கற்களும், சப்பாத்தும், குப்பை கூளமும், குட்டிச்சுவரும், வெட்டவெளியும், சூரைச்செடியும், வேரும், விறகும் இன்னும் மற்ற புல் பூண்டுகளும், பூச்சிக்கூண்டுகளும், துறிஞ்சல்களும், மண்மேடுகளும் நிறைந்து கண்கொண்டு சகிக்கமுடியாதவிதம் பழமையான பாழும் சத்திரம்போலும் காணப்பட்டது. இவைகளையெல்லாம் கவனித்த சிதம்பரம் தனக்குள் பெரிய யோசனையில் மூழ்கிவிட்டான். நமது குருநாதர் மந்திரவாதி வீட்டுக்குப்போவதாகக் கூறிவிட்டு பாழும் சத்திரம்போன்றதும், நிர்மானுஷ்யமானதுமான இந்த இடத்திற்கு ஏன் வந்திருக்கிறார்? இங்கு இந்த சத்திரத்தை யன்னியில் வேறு வீடுகளோ, குடிசைகளோ, அன்றி குடியானவர்கள் சஞ்சரித்து வேலை செய்யக்கூடிய வயல்களோ, தோட்டங்களோ, முதலிய எதுவும் காணப்படவில்லையே! இவ்விடம் வந்திருப்பது யாது காரணமாகவிருக்கும்? இதை நாம் எவ்விதம் கேட்பது? இதைக் கேட்போமானால் குருநாதருக்குக் கோபம் உண்டாகுமோ, என்னவோ! என்ன காரணம்பற்றி அவர் இவ்விதம் வந்து சேர்ந்திருக்கிறார்?'' என்று பலவிதமான யோசனைகளுடனிருக்கையில் உபாத்தியாயர் அவனை நோக்கி "சிதம்பரம்! நீ ஏமாவதியின் பக்கலிலேயே உட்கார்ந்திரு; யான் இதோ வருகிறேன். பொழுது அஸ்தமிக்கும் தருவாயிலாய்விட்டது. நீ எதற்கும் சிறிதும் பயமின்றி இவ்விடத்தில் தைரியமாய் உட்கார்ந்திரு. என்ன

பேசாதிருக்கிறாய்? இங்கு யாரேனும் ஏதேனும் கேட்பார்களே யாயின் "எனக்கொன்றும் தெரியாது. என் மாமனாரைக் கேட்டுக் கொள்ளுங்கள்" என்று கூறிவிடு. தெரிந்ததா! நான் இதோ வந்து விடுகிறேன்." என்று கூறி வெளியே போய்விட்டார்.

இதைக்கேட்ட சிதம்பரம் அஞ்சலி பந்தனாக நின்றுகொண்டு குருவின் வார்த்தையைக் கேட்டு அதன்படியே செய்வதாகக் கூறி அவரையனுப்பிவிட்டு ஏமாவதியின் பக்கலில் வந்தமர்ந்தான். சிதம்பரத்திற்கோ தனது உபாத்தியாயர் கூறிய விஷயத்தில் ஒன்றுமே புரியவில்லை. அவனுடைய மனம் தெளிவுபடாது குழம்பிக் கொண்டே இருக்கின்றது. அதை உபாத்தியாயரிடத்தில் கேட்கவோ பயமாகவிருக்கின்றது; அஞ்சுகின்றான். உபாத்தியாயரின் கட்டளைக்குப் பதிலளித்தவனேயன்றி அவரிடத்தில் தானாக எதிர் நின்று பேசியறியாத சாதுவாகையால், அவனால் ஒன்றும் செய்தியறியக்கூடவில்லை. அவன் தன்னாலானமட்டில் யோசித்துப்பார்த்தான்; அவனுக்கு ஒன்றும் புலப்படவில்லை. ஏற்கெனவே முதல் நாள் இரவு மனோன்மணியால் தனக்கு நேர்ந்த பெரிய விபத்தையும், அதனின்றும் தான் தப்பியதையும் எண்ணி அபார திகிலடைந்தான். அந்த அவஸ்தையுடன் இன்று வெகு மர்மமாகவே நடக்கும் புதிய சம்பவங்களின் விஷயத்தையறியக்கூடாது கலங்கியவாறு கடவுளை சற்றும் மறவாது "காப்பாற்றுபா! அரி! அரி! கருணையங் கடவுளே! காத்தருளவேண்டும். பாஞ்சாலி ரக்ஷகா!" என்று ஆதியில் தனக்கு உபதேசம் செய்த பெரியாரின் வாக்கை ஜபித்துக் கொண்டே உட்கார்ந்திருந்தான்.

நன்றாக அஸ்தமித்துவிட்டது. ஏமாவதிக்கு ஜுரம் நின்றுவிட்டதற்கடையாளமாக உடம்பு முற்றும் வெயர்வை பொங்கி வழிந்தது. ஜுரத்தின் வேகம் நீங்கிக் கண்விழித்துக்கொண்டு "அப்பா! மாமா! என்று அவள் கூப்பிட்டாள். இதுகேட்ட சிதம்பரம் வெகு கனிவுடனும், பக்ஷத்துடனும் பேசத்தொடங்கி "அம்மணி! ஏமாவதி! இதோ நானிருக்கின்றேன். அப்பா வெளியில் சென்றிருக்கின்றார். இதோ இப்போதே வந்துவிடுவார். கண்மணி! ஏமாவதி!

உடம்பு நன்றாக குணப்பட்டு வருகின்றதா! உடம்பில் அதிகமாக வெயர்வை வருவதைப் பார்த்தால் ஜுரம் விட்டுவிட்டதுபோலத் தோன்றுகின்றதே!" என்று கூறிக்கொண்டே தனது மேல் உத்தரியத்தால் அவளுடைய உடம்பிலுண்டான வெயர்வையை முற்றும் துடைத்தான்.

கடுமையாய்க் காய்ந்த ஜுரம் விட்டுச் சற்று தெளியப் பெற்ற ஏமாவதி தன் பக்கலிலிருக்கும் தன் உயிர்த் துணைவன் கூறிய மொழியையும் காட்டும் அன்பையுங் கண்டு மெத்த மன மகிழ்ந்தவளாய் நாற்புறமும் சுற்றிப் பார்த்தாள். தான் அப்போது படுத்திருக்கும் இடம் தன் வீடல்லாமல் வேறு இட மென்பதை நொடியில் உணர்ந்துகொண்டாள். அவ்வாறு உணர்ந்துகொண்ட ஏமாவதி சிதம்பரத்தை நோக்கி, "நாம் தற்போது எந்த விடத்திலிருக்கின்றோம்? இது நமது வீடு அல்ல போலத் தோற்றுகின்றதே"—என்று நயமாகக் கேட்டாள்.

**சிதம்பரம்:**—கண்ணே! ஏமா! நீ நினைத்ததுபோலவே நாம் வேறு இடத்தில் தானிருக்கிறோம். எனக்கே அதன் தகவல் தெரியாது. எனது குருநாதர் அதைப் பற்றி என்னிடங் கூறவில்லை; யானும் அதைக் கேட்கப் பயந்து வாளாவிருந்தேன். உனக்கு மந்திரிப்பதற்காக மந்திரவாதியிடம் அழைத்துப் போவதாக மட்டும் அவர் தெரிவித்தார். மற்றபடி யொரு விஷயமும் எனக்குத்தெரியாது. என் குருநாதர் சீக்கிரம் வந்துவிடுவார்,பயப்படாதே.

**ஏமாவதி:**—என் கண்ணாளா! தாங்களிருக்கையில் எனக்குப் பயமென்பது உண்டோ! அப்பா எனக்கு யாரிடத்திலேனும் மந்திரம் செய்தாரா! அன்றி மந்திரவாதியை அழைத்துக்கொண்டு வரச் சென்றிருக்கின்றாரா?

**சிதம்பரம்:**—கண்மணி! ஏமாவதி! யாது காரணமாகச் சென்றனரோ யானறியேன். என்னிடம் ஒரு தகவலும் தெரிவிக்கவில்லை. சீக்கிரமே வந்துவிடுகின்றேன் என்று மட்டும் தெரிவித்துச் சென்றார். ஏன் என் தங்கமே! உனக்கு என்னவேண்டும்?

ஏமாவதி:—நாதா! எனக்கு ஒன்றும் வேண்டாம். அவர் எங்குச் சென்றார் என்பதை யறிந்திடவே கேட்டேன். பொழுது போய் விட்டது; இருளும் இன்னும் சீக்கிரத்தில் சூழ்ந்துவிடுமே! இந்த விடத்தில் நம்மைத் தவிர வேறு யாரேனு மிருக்கிறார்களா! அன்றி நாம் தனிமையாக விருக்கின்றோமா! அவ்விதம் தனிமையாக விருந் தால் பயமாக விருக்கு மல்லவா! அதை நினைக்க பயமாக விருக் கின்றதே!

சிதம்பரம்:—கண்மணீ! இங்கு எனக்குத் தெரிந்தவரையில் நம்மைத் தவிர ஊனைச் சுமக்கும் மானிடர் யாருமில்லை; எங்கும் வ்யாபியாயுள்ள கருணை மூர்த்தியே நமது இருதயத்தில் குடி இருந்து நம்மைக் காக்கையில் பயத்தை ஏன் நீ கொள்ளவேண்டும்? நீ பய மென்பதை ஒரு சிறிதும் கொள்ளவேண்டாம். கடவுளையே நம்பி இரு; அவர் நம்மைக் காப்பார்.

ஏமா:—மாமா! கடவுளையே நம்பித் தானிருக்கிறேன். இருந் தும் என்னை யறியாமல் ஏதோ பயமாக விருக்கின்றதே! இருளும் சூழவாரம்பித்துவிட்டதே! ஓர் விளக்குக் கூட இல்லாது இருளில் நாம் என்ன செய்வது?

சிதம்பரம்:—கண்ணூ! பயப்படாதே! புறக்கண்ணிற்குத் தெரியக் கூடிய விளக்கின் ஜோதியால் நமக்கு பயம் நிவர்த்தியாய் விடுமா! பரமாத்மாவாகிய பரஞ் சோதியின் துணை இருந்தால் மட்டும் நாம் காப்பாற்றப் படுவோமே யன்றி மற்றபடி நம்மைக் காக்க ஒருபொருளும் உபயோகமாகாது. அந்த ஜோதியின் ப்ரகாசத்தை மனத்திடையில் பதித்துக்கொண்டால் நாம் ஒருவித மான ஆபத்திலும் சிக்காது தேறுவோம். தற்சமயம் நமக்கு இங்கு விளக்கு இருக்குமானால் நாம் இங்கு இருப்பதை விளக்கிக் காட்டிக் கள்ளர்களுக்கு உளவாய் விடும்; இந்தப் பாழும் சத்திரத் தில் விளக்கில்லாத இருளில் இருந்தால் இங்கு ஆளிருக்கும் அரவத்தை யறியக் கூடாது போய்விடும். ஆகையால் உன் தந்தை வருகிற பரியந்தம் நாம் பேசாது—நமது குரலைக் காட்டிக் கொள்ளாமல்—கடவுளை மனதில் துதித்தபடியே மவுனமாக விருப்

போம்." என்று கூறி அவளை அணைத்தவாறு தேற்றினன். சிதம்பரம் கூறிய மொழிகளை வெகு கவனத்துடனும், அன்புடனும் உட்கொண்ட ஏமாவதி கடவுளின் திருநாமங்களை உச்சரித்தபடியே இருந்தாள். சிதம்பரமும் தன் மனத்திற்குள்ளாகத் தோத்திரஞ் செய்யத் தொடங்கினன்.

ஆலிலையில் அவதரித்த கிலலோகங்களையும்
அன்புடன் படைத்த கண்ணு!
அவனிமிசை அடியேன் ஜெனித்துமென் மனவிருளை
அகற்றிட வழி யறிகிலேன்
சீலமாம் புண்ணியம் சிறிதும் யான் செய்திலேன்
தீமையே செய்தொழிந்தேன்
சீதரா உன்றனிரு மலரடி பணிந்துனது
சேவை நான் செய்தறிகிலேன்
காலத்தை முற்றும் யான் கண்மூடித் தனமாய்க்
கழித்து வீண்பாவி யானேன்
கல்லாத பேதையாய் அறியாமை யெனுமிருட்
கடலினில் துளைந்து நொந்தேன்
பால கோபாலனே பாரில் என் துயர் கண்டு
பரிசோதி யாமலையா
பவந்தீர ஆதரித் தாண்டருள்செய் அப்பனே
பாவை ருக்மிணி நாதனே!

என்னப்பனே! கருணு மூர்த்தியே! பரமதயாளா! எங்களைக் காத்தருள எழுந்தருளாய். நம்பிய அடியவரை வெம்பிடவைத்தல் நும் போலியர்க் கழகாமோ! ஜெனித்த நாள் முதலாக கணித்தற் கரியா மூடத் தன்மையில் என் காலத்தைக் கடத்தி வருகிறேன். அப்படிப் பட்ட என்னை என்னல் தாங்கக்கூடாத அபாரமான ஆபத்திலிருந்து நேற்றிரவு காப்பாற்றினய். இன்று இந்த பாழும் சத்திரத்தில் எங்களைக் கொண்டு தனிமையில் வைத்த காரணம் யாதா யிருக்குமோ, அதனை யறியாது தடிக்கும் ஏழையைக் காத்தருள வேண்டும்" என்று பலவாறு துதித்துக்கொண்டே இருக்கையில்

ஒருவர் காஷாயதாரியாகவும், கமண்டல தண்டத்துடனும் ருத்திராக்ஷ விபூதி ஜொலித்தவாறும், "சம்போ! சங்கரா! மகா தேவா! கருணாசாகரா!" என்று கூறிக்கொண்டே அந்த விடத்திற்கு வந்தார். அப்பொழுது இருள் சிறிது சூழ வாரம்பித்துவிட்டது.

ஏமாவும் சிதம்பரமும் பயத்தினல் வாடி வருந்தி தத்தளித்துக் கொண்டிருந்த தருணம் இது. இச்சமயம் தாம் சற்றும் எதிர் பாரா விதமாக ஓர் சன்னியாசி அங்கு வந்ததைக் கண்டதும் இருவரும் ஒன்றுமே தோன்ருமல் ப்ரமித்தார்கள். வந்துள்ளவர் சந்யாசியாகத் தோன்றினும் அவர் உண்மையான சந்யாசியா அன்றி கபட சந்யாசியா தெரியவில்லையே என்று அவர்கள் தியங்கிக் குழம்பிக் கொண்டிருக்கையில், வந்த பரதேசி அவர்களை நோக்கி "நீங்கள் யார்? இங்கு எப்படி வந்தீர்கள்? இங்கு எதற்காக வந்தீர்கள்?" என்று கேட்டார்.

இதுகேட்ட சிதம்பரம் எழுந்து அந்த சாதுவை வணங்கி விட்டு "சுவாமி! நாங்கள் எதற்கு வந்தோம் என்றும், யார் என்றும் எங்களுக்கு ஒன்றும் தெரியாது. என் குருநாதர் வெளியே சென்றிருக்கிருர். அவர் வந்தவுடன் அவரைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்." என்று தன் குரு சொல்லிச் சென்றபடியே கூறினன்.

இதைக் கேட்ட சந்யாசி ஒருவிதமான பார்வையுடன் பேசத் தொடங்கி "அடேய் பயலே! உன்னை நான் விவரம் கேட்டால் யாரையோ போய்க் கேட்கவேண்டு மென்கிருயே! அதென்னடா செய்தி! உன் குருவாவது, திருவாவது! என்னடா விழிக்கின்ருய்? அந்தப் பெண் யார்? அவளும் நீயும் தனித்திருப்பதை நோக்கின் அந்தப் பெண்ணை நீ அபகரித்துக்கொண்டு வந்துவிட்டாய் என்று விளங்குகின்றது. உண்மையை உரைத்துவிடு; இல்லையேல் எனது சாபத்திற்கு ஆளாவாய்" என்ருர்.

இதைக் கேட்ட சிதம்பரமும் ஏமாவதியும் நடுநடுங்கிப் போய் "ஆகா! அநியாயமே! இதென்ன கஷ்டம்!" என்று பதறுகிருர்கள்.

ஏமாவதி தன்னுடைய பல ஹீனமான நிலைமையையும் கவனியாது வெகு வீராவேசத்துடன் பேசத் தொடங்கி "யோகீச்வரரே! தங்களைப் பார்த்தால் உலகத்தை வெறுத்து உத்தமனடியையே பஜித்துக்கொண்டிருக்கும் தீர வைராக்கியமுள்ள முனிவர் போலக் காணப்படுகின்றீர்கள். அவ்விதமுள்ள தாங்கள் அநியாயமான வார்த்தைகளைக் கூறி அறியாத பேதைகளை அலறிடச் செய்வது அழகாமோ! சாப மிடுவதற்குச் சக்தி வாய்ந்த தமக்கு என் காதலர் என்னை அபகரித்துக்கொண்டு வரவில்லை என்பதைத் தெரிந்து கொள்வதற்கு முடியவில்லையா! அவ்வித உண்மையை அறிந்து கொள்ளாத உமது துறவறமும் சாபமும் வெறும் வாய்ப் பேச்சே என்பதை சிறிய பேதை யாகிய யான் கூறவேண்டுமோ? உலக வியலையே அறியாத பரமசாதுவாயும் சத்குண சீலராயுமுள்ள என் காதலரைக் கண்டு தாங்கள் அவ்வாறு கூறியதே பெரும் பாவமாகி விட்டது. என்னை என் பிதாவே அழைத்து வந்திருக்கிறார். அவருடன் அவருடைய மாணாக்கனும், எனது காதலருமாகிய இவர் வந்திருக்கிறாரே யன்றி தனிமையில் வரவில்லை என்பதை இப்போதேனும் தெரிந்துகொள்ளும்" என்று படபடத்துக் கூறினாள்.

யோகீச்வரர் ஏமாவதியின் பதி பக்தியையும் தைரியத்தையும் கண்டு ஆச்சரியமும் ப்ரமிப்பும் கொண்டார். அவருக்குச் சந்தோஷம் ஒரு புறம் பொங்கியது. அதனால் அவர் கண்களில் ஆநந்த பாஷ்பம் மாலை மாலையாகப் பெருகி வழிந்தோடியது. அந்நிலைமையில் அவர் தமது ஒரு கரத்தினால் சிதம்பரத்தையும் மற்றொரு கரத்தினால் ஏமாவதியையும் அவர்கள் சற்றும் எதிர் பாராத விதமாகக் கட்டித் தழுவிக்கொண்டு "என் கண்மணிகளா! என் செல்வங்களா!" என்றார். அதற்குமேல் அவரால் பேசவொட்டாமல் துக்கம் தொண்டையை அடைத்தது. அவர் ஒரு சிறிய குழந்தையைப் போல தேம்பித் தேம்பிப் புலம்புகின்றார். பின்னர் தன்னை யொருவாறு தேற்றிக்கொண்டு பேசத்தொடங்கி "என் கண்மணிகாள்! ஐயோ! எனக்கு இவ்வுலகத்தின் பற்றை வெறுக்கவும், ஈசனின் பதத்தைத் தொழவும், சாபமிடவுமான சக்தியிருக்குமாயின்

எனது இல்லறத்தின் தருமத்திற்கு சொல்லரியாத துணைவியா யிருந்த என் இல்லக்கிழத்தியை—இணையிலா உத்தவியை, கற்பலங் காரியை, பொற்பு நிறைந்த புனிதவதியை, என்னுயிர்த்துணைவியை, என் கண்மணிபோன்ற நவமணியை—இழந்துவிட்டு, ஐயோ! கற்பை மதியாத துர்ப்புத்தியுள்ள அற்பப்பதரான நிர்ப்பாக்கியவதியான குலநாசகாலியை மணந்துகொண்டு என் மறபிற்கே மறையாத அப கீர்த்தியையும், என்னுயிர்போன்ற உங்களுக்கும் தீராத துயரத்தை யும் யானே உண்டாக்கிவருத்தவும் என்னையே யான் நொந்து வெறுப்பதுடன் உலகத்தையும் வெறுக்கும் தன்மைக்கும் யான் வந் திருப்பேனு! என் செல்வக் குழந்தைகாள்! உங்களிருவருடைய ஆநந் தத்தைக் குலைக்க எண்ணிய குடிகோலியாகிய அந்த மனோன்மணி யின்எண்ணத்தில் மண்ணைப்போட்டுவிட்டேன். என்னப்பனே! சிதம் பரம்! இன்று முற்றும் நாமிருவரும் பட்டினி இருந்த காரணத்தை யானறியாதவனன்று. எல்லாவற்றையும் யானறிவேன். ஏமாவதி யின் தேக நிலைமை இன்றுமட்டும் புதிதாக வந்ததல்ல. அப்பா! குழந்தாய்! நேற்று இரவு உனக்கும் மனோன்மணி—ஆ! பெயரை யும் கூறவேண்டுமா! சண்டாளி, த்ரோகி—பாதகிக்கும் நடந்த சகல விஷயங்களையும் என் கண்ணால் கண்டு, செவியால் கேட்டு, என்னுவி துடித்ததை அந்த ஆதிமூலந்தானறியவேண்டும். அந்தோ! அந்த கோர சம்பவத்தை முற்றும் நான் நேராக அறிந்த காலத்தில் என் னிருதயம் துடித்த துடிப்பில் அந்த பாதகியை ஒரே வெட்டாகத் தள்ளிவிடலாமா என்று யோசித்தேன். பின்னர் தீர்க்கமாக யோசனை செய்ததில் அவ்விதம் செய்வதைவிட வேறு வழியில் செய்வதுதான் உத்தமம் என்று தோன்றியதால் அவ்வமயம் எனது இழந்த பொறுமையை மிக்க ப்ரயாசையுடன் வருவித்துக்கொண் டேன். ஆகா! நினைத்தாலும் நடுங்குகின்றது. சண்டாளி வாயில் வந்தவாறு பிதற்றியதுடன் கத்தியைக் கையிலேந்தி உன்னுடன் யுத்தம் செய்வதற்குப் புத்தி துணிந்த கபடி வேறு எதற்குத்தான் அஞ்சுவாள்? அப்பொழுதே எனது சித்தம் மாறி வெறுப் படைந்துவிட்டது. மெத்த யோசனையில் புத்தி சுழன்றது. இர வெல்லாம் குழம்பிய மனத்துடன் யோசனை செய்தேன். இப் போதுகொண்ட கோலத்தை யடையவே எனது உள்ளம் தீர்மானித்

துத் துணிந்துவிட்டது. ஏமாவதியின் பரிதாபகரமான நிலைமைக் காகப் பகல்வரையில் காத்திருந்தேன். அவளுக்கு சற்று குணங் கண்டுவருவதை யறிந்தேன். இனிமேல் பயமில்லை என்று நம்பி மாந்திரீகன்வீடு செல்வதாகப் பாவனைகாட்டி வீட்டைவிட்டுக் கிளம்பத் தீர்மானித்துவிட்டேன்.

நேற்று இரவு நடந்த சம்பவத்தைக் கண்டவுடன்—என் மனம் தீர்மானத்தை யடைந்தவுடன்—யான் எனது முக்கியமான பொருள் களையெல்லாம் எடுத்து இந்த தலையணையின் உரையில் போட்டு தலை யணையைப்போலவே நன்ருக மூடி, கட்டி, மேல் உரை மற்றென் றுக்குள் அடைத்து அதைத் தலையணையைப்போலவே உபயோ கித்து எடுத்துக்கொண்டேன்; உடனே புறப்பட்டுவிட்டேன். யான் எனது குருவினிடம் கலைகளைக்கற்ற காலத்தில் என் குருநாத ருடன் இந்த சத்திரத்திற்கு வந்திருக்கிறேன். அக்காலத்தில் இந்த இடத்தில் முற்றுந் துறந்த முனிவர்கள் மட்டும் வாசம் செய் யக்கண்டேன். பின்னர் யான் ஒரு சமயம் இந்தவிடத்திற்கு அருகிலுள்ள க்ராமவாசத்திலிருப்பவரின் இல்லம் வந்திட நேர்ந்த போது இங்கும் வந்து அந்த யோகீசுவரரை வணங்கிவிட்டுச் சென் றேன். அந்த நினைவு எனக்கு நேற்று உண்டாயது. அந்த விதம் உண்டானமையால் என் மனம் சந்தோஷமடைந்து நான் உங்களை இங்கு அழைத்துக்கொண்டுவந்து சேர்த்தேன். இந்த இடம் பாழும் சத்திரம்போல விருப்பினும் பின்புறம் முற்றும் விஸ்தாரமான இடம் நிறைந்திருக்கின்றது. அந்தவிடத்திலேயே நான் தெரிவித்த யோகீச்வரர் இருக்கின்ருர். நான் அவரிடம் செல்வதை உத்தே சித்து உங்களுக்குத் தைரியம் கூறிவிட்டு நேரே அங்கு சென்று அந்த மகானை வணங்கி எனது குறைகளை முற்றும், ஒன்றையும் ஒளியாது, ஆதியோடந்தமாக உரைத்துப் பின் "எனக்கு இனி உலகப்பற்று வேண்டாம்; இல்லறவாசை வேண்டாம்; எல்லாவற் றையும் ஒழித்துவிட்டேன்; என்னைத் தாங்கள் தயவு செய்து ஆத ரித்துத் தமது அடியவர்களில் ஒருவனுக அங்கீகரிக்கவேண்டும். எனக்கு சன்னியாசம் கொடுக்கவேண்டும்" என்று கதறி முறை யிட்டேன்.

அந்த யோகீச்வரர் என்னை இதற்கு முன்னும் இருதரம் கண்டிருப்பதால் எனது சரிதையைக்கேட்டு மனமுருகியவராய் அவ்விதமே செய்வதாக வாக்களித்தார். என்னை உறுதியான ப்ரமாணம் செய்யச்செய்து அதைப்பெற்றுக்கொண்டு நான் உண்மையிலேயே உலகை வெறுப்பதை நன்கறிந்துகொண்டு என்னை ஆசீர்வதித்து இந்த கோலத்தை அணியச்செய்து சில மந்திரங்களை உபதேசம் செய்தார். என்னை அவருடைய அருளிற்குப் பாத்திரமாக்கிக் கொண்டதைப்பற்றி மனமகிழ்ந்தேன். பிறகு யான் அவரிடம் விடைபெற்றுக்கொண்டு உங்களிருவரையும் அழைத்துவருவதாகக் கூறிவிட்டு இங்கு வந்து, உங்களுடைய மனோபாவத்தை மற்றுமொருதரம் அறியும் பொருட்டு அவ்விதம் கேட்டேன். உங்களுடைய அன்யோன்யமான அன்பைக்கண்டு அகம் குழைந்தேன். இனி எனக்கு ஒருவிதமான கவலையும் இல்லை என்று மனந்துணிந்தேன். என் ரத்தினங்காள்! இப்போது நான் எந்த யோகி என்று தெரிந்துகொண்டிருப்பீர்களல்லவா!" என்று தனது முழுவரலாற்றையும் ஒன்றுவிடாது எடுத்துரைத்தார். அவ்விதமுரைத்த யோகீச்வரர் யார்? அவரே நமது ஏமாவதியின் தந்தை என்பது நாம் கூறாமலேயே விளங்கும்.

ஏமாவதியும் சிதம்பரமும் தாம் சற்றும் எதிர்பாராதிருக்கையில் தம்மை யோகீச்வரர் அணைத்துகொண்டதும், திடுக்கிட்டு தம்மை விடுவித்துக்கொள்ள முயன்றும் அவர்களை யோகீச்வரர் விடாது பிடித்துக்கொண்டார். உடனே அவரை இருவரும் உற்று கவனித்தார்கள். அவ்வாறு கவனித்ததும் அவர் இன்னாரென்பதை இருவரும் தெளிவாய்த் தெரிந்துகொண்டு வியப்புற்று ப்ரமித்திருக்கையில் அவர் கூறிய வரலாற்றைக் கேட்டதும் இருவருக்குமுண்டான ஆச்சரியத்திற்கும், விசனத்திற்கும் அளவிடவியலாது போய்விட்டது. முந்தின நாள் இரவில் நடந்த விஷயங்களையொன்றும் ஏமாவதி அறியமாட்டாளாகையால் அவள் விவரம் தெரியாது விழிக்கின்றாள். சிதம்பரம் நடந்த சம்பவ முற்றும் தனது குரு நேருக்கு நேராகக் கவனித்ததை எண்ணி இன்பமும் துன்பமும் அடைந்தான். பின்னர் இருவரும் அவருடைய மனோவிரக்

திக்கும் தற்போது பூண்டுள்ள வேஷத்திற்கும் மிகவும் விசனித்தார்கள்.

ஏமாவதி:—ஆகா! என்னுருயிர் தந்தையே! தாங்கள் என் தாயார் இறந்த பின்னர் ஒரு நிமிஷமேனும் இன்பமில்லாத சித்தத்தினராய் இருந்ததுடன் தற்போது உலகையே வெறுக்கவும் ஆய்விட்டதே! ஆகா! பாவி நான் ஜெனித்தபின்னல்லவோ தமக்கு இத்தகைய சங்கடங்களெல்லாம் நேர்ந்தன!

குருநாதர்.—என் குழந்தாய்! உன்னால் என்ன விருக்கின்றது? எல்லாமவனருளல்லவா! நான் பூர்வ ஜன்மாவில் செய்த வினைப் பயனே யானனுபவிக்கின்றேன். இதற்கு ஒருவர் காரணகர்த்தராக ஆவார்களா! கண்மணிகாள்! நீங்களிருவரும் காலை முதல் பட்டினியாகக் கிடக்கின்றீர்கள். நீங்களிருவரும் என்னுடன் வாருங்கள். அங்கிருக்கும் மகானை தரிசனம் செய்துவிட்டு போஜனம் செய்யலாம்'' என்று அழைத்தார்.

உடனே இருவரும் அவர் பின் சென்றார்கள்; இருள் நிரம்பி இருந்தபடியால் சற்று சிரமப்பட்டு நடந்துகொண்டே சென்று, தபோநிதியிருக்குமிடத்தை யடைந்தார்கள். குருநாதர் இருவரையும் நோக்கி அந்த மகானை வணங்கச்சொன்னார். அவ்வாறே இருவரும் வணங்கி ஆசிபெற்று எழுந்தார்கள். பின்னர் உபாத்தியாயர் அந்த தபோநிதியை நோக்கி! "சாதுக்களே! இந்த பையன்தான் எனது மாணுக்கன்—மகன்போன்றவன்—மருமகனாகப்போகின்றவன், மகாசாது; கள்ளங்கபடமற்றவன். சற்குணசம்பன்னன். குருவாஞ்சைமிக்கவன்; பரிசுத்தாத்மாவையுடையவன்; அநீதி என்பதை அறியாதவன்; நியாயமான வழியைக் கைப்பற்றி தீய வழியை திரஸ்கரித்துத் தள்ளப்பட்டவன். உத்தமமான மனப்போக்கையுடையவன்; இவனுக்கே எனது குமாரத்தியாகிய இந்தப்பெண்ணை மணம் செய்விக்கத் தீர்மானித்துவிட்டேன். எனது சரித்திரம் முற்றும் தாமறியாததில்லை. தங்களுடைய ஆசீர்வாதத்தினால் இவ்விருவரையும் நல்ல சுப முகூர்த்தத்தில் விவாகம் செய்துவிடக் கோருகிறேன்'' என்று கூறினார்.

இதைக் கேட்ட யோகிச்வரர் அப்படியேயாகட்டு மென ஒத்துக்கொண்டு அவர்களை மீண்டும் ஆசிர்வதித்துத் தமது கையி லிருந்து ச்வாமி நிவேதனப் பொருள்களாகிய கனிவகைகளையும் பிரஸாதத்தையும் அம் மூவருக்கு மளித்து உண்பித்தார். அன்று இரவு வெகு நேரம் எல்லோரும் ஏதேதோ விஷயமாகப் பேசிக் கொண்டிருந்து பின்னர் நித்திரை கொண்டு, விடியு முன்னெழுந் தார்கள். ஏமாவதியின் உடம்பு நன்றாகக் குணமாகிக் கொண்டு வரத் தொடங்கியது. அன்று உதயமாயதும் சத்திரத்திலுள்ள யோகிச்வரர் உபாத்தியாயரை விளித்து "நண்பரே! இன்று முதல் உமக்கு நான் தயானந்த யோகீச்வரர் என்ற நாமத்தை யளிக்கின் றேன். இனி உம்மைஉலகம் அவ்விதமே அழைக்கட்டும். உமது குழந்தைகளின் விவாகத்திற்கு இன்றே நாள் பார்க்கிறேன்." என்று கூறி பஞ்சாங்கத்தை எடுத்து ஏமாவதியின் விவாகத்திற்கு சமீபத் தில்-அன்றைக்கு நான்காவது தினத்தில்-லக்னம்பார்த்துக் கூறினர். அன்று திருமணத்தைச் சிறப்பாக நடத்தி விடத்தீர்மானம் செய் தார். அந்த சத்திரத்திற்கு 3 மைலுக்கு அப்பால் ஓர் கோயி லிருக்கிறது. அந்த கோயிலுக்குச் சென்று கோயிலிலேயே விவாகத்தை நடத்திவிடுவதென்று அவர்கள் முடிவு செய்துகொண்டு அதற்கான ஏற்பாடுகளெல்லாம் செய்யத் அவக்கினர்கள். அந்த நான்கு நாட்களும் அந்த சத்திரத்திலேயே தங்கினர்கள். சிதம்பர மும் ஏமாவதியும் தங்களுக்கு விவாகம் நடக்கப்போகும் சந்தோஷத் தினல் பூரித்துப் புளகாங்கித மடைந்தார்கள். அவர்களுடைய மகிழ்ச்சிக்கு எல்லேயே இல்லை. தம்மிருவரையும் தம்பதிகளாகச் சேர்த்துவைக்கும் கட வுளை மனமாற வேண்டி துதித்துப் பூஜித்துப் பக்தி செய்தார்கள். இவ்விருவரும் ஏகோபித்த மனத்துடன் உல்லாசமாயிருக்கும் தன்மையைக் கண்டு தயாநந்தர் பெரு மகிழ்ச்சியை அடைந்தார்.

குறித்த தினமும் வந்துவிட்டது. அன்று சூர்யோதயத் திற்கு முன்னமேயே தம்பதிகளையும் அழைத்துக்கொண்டு அங் குள்ள யோகிச்வரருடன் ஓர் வண்டியி லமர்ந்து தேவாலயத்தை யடைந்தார்கள். அங்கு தேவதா தரிசனர்த்தம் வந்திருந்த ஆண்

பெண்பாலர்களை நோக்கி தயாநந்தர் வெகு வினயமாக அந்த திருமணத்திற்கு இருந்து ஆசிர்வதித்துவிட்டுச் செல்லவேண்டு மென்று வேண்டிக்கொண்டார். பின்னர் அங்கு வந்திருந்த எல்லோரும் அதற் கிசைந்தார்கள். அவர்களில் யாரேனும் "இந்த விவாகத்திற்குச் சொந்தமான பெண் பிள்ளைகள் ஏன் வரவில்லை?" என்று கேட்கப் போகிறுர்களே என்ற முன் யோசனையை உடைய தயானந்தர், அவர்களை எல்லாம் அழைக்கும்போதே கலியாணம் செய்துகொள்ளும் தம்பதிகள் ஒருவருமே மனிதரில்லாத பரதேசிகள் என்றும் தாங்கள் தானிருந்து நடத்திவைக்கவேண்டும் என்றும் வேண்டிக்கொண்டமையால் அந்த விஷயமாக யாரும் ஒரு வித வார்த்தையும் கேட்பதற்கு இடமில்லாது போய்விட்டதுடன் அவர் கூறியதை உண்மை என்றும் நம்பிவிட்டார்கள். அவர்களில் சில பெண்டுகள் தயாள குணமுடையவர்கள் தமது ஆபாரணதிகளால் ஏமாவதிக்கு அலங்காரம் செய்தார்கள். பிறகு தெய்வ சன்னிதானத்திற் கெதிராக மணவறை ஜோடித்து அதில் கலியாணப் பிள்ளையையும் பெண்ணையும் உட்காரவைத்து முறைப் படிக்குச் சகல மான சடங்குகளையும் செய்ததுடன் அங்கு வந்திருந்த வயோதிக தம்பதிகளைக் கொண்டு ஜாதி வழக்கப் படியே சிதம்பரத்திற்கும் ஏமாவதிக்கும் விவாகத்தை குறித்த லக்னத்தில் நிறைவேற்றி ஞர்கள். வந்திருந்த சகலருக்கும் கற்கண்டு, சர்க்கரை, கதலி, தேங்காய், வெத்திலை பாக்கு முதலியன வழங்கி அளவிலாத ஆநந்தத்தை யடைந்தார். அன்று தேவாலத்தில் எல்லோருக்கும் சமாராதனை செய்தார். வந்திருந்த யாவரும் சந்தோஷமாக போஜனஞ் செய்துவிட்டு தாம்பூலாதிகளைப் பெற்றுக்கொண்டு வதுவரர்களை ஆசிர்வதித்துப் பின் தமதில்லமேகினர்கள். தயாநந்தர் பேரானந்த பரிபூரிதராகி தம்பதிகளைக் கண்டு மனம் பூரித மடைந்தார். அன்று செய்யவேண்டிய சகலமான சடங்குகளையும் கிரமப்படி நடத்தி தம்மாலியன்ற தான தருமங்களையும் செய்தார். விவாகம் வெகு சிறப்பாக நடந் தேறியது. அன்று பூராவும் சன்னிதானத்திலேயே தங்கி இருந்து மறுநாள் காலையில் எல்லோரும் சத்திரத்தையே அடைந்தார்கள்.

தயாநந்தர் தாம் தமது வீட்டை விட்டு வந்தபிறகு மீண்டும் அந்தப் பக்கமே செல்லவில்லை. அவர் ஏமாவதிக்கு விவாகம் செய்வித்த ஊரிலேயே ஓர் வாடகை வீட்டைத் தேடி அதில் வேண்டிய சகலமான சாமான்களையும் வாங்கி நிரப்பித் தகுந்த துணைக்காக ஓர் கிழவியை—நாணயமுள்ளவளாகத் தேர்ந்தெடுத்து அவளை—தமது மகள், மருமகள் ஆகியவர்களுக்குத் துணையாகவும், சகல வேலைகளையும் செய்யும்படியாகவும் ஏற்பாடு செய்து மாத சம்பளமும் பேசிவிட்டு, அந்த வீட்டில் தமது கண்மணிகளை யோகீச்வரரின் அனுமதியின் பேரில் குடியேற்றி வைத்ததுடன், சிதம்பரத்தை அவ் வூரிலுள்ள ஒரு கடையில் கணக் கெழுதும் வேலையில் மாதம் 30 ரூபாய் சம்பளத்தில் யோகீச்வரரின் சிபார்சின் பேரில் அமர்த்தினர். சிதம்பரம் வெகு நாணயத்துடன் தனது வேலையைச் செய்துகொண்டு ஏமாவதியை தனது உயிராக மதித்து ஆதரவுடன் குடும்பம் நடத்தி வருகிறன். தயாநந்தர் தான் குருவாகக் கொண்ட யோகீச்வரருடனேயே வாஸஞ் செய்யலானர். தான் மாறுவேஷந் தரித்திருந்தபடியே தான் முன் வசித்த ஊருக்குச் சென்று மனேன்மணி அங்கு அந்த வீட்டிலேயே இருக்கிறளா என்பதை விசாரித்துக்கொண்டு வந்தார். அவள் அவ் வூரிலேயே காணப்படவில்லை என்று தெரிந்துகொண்டு வந்துவிட்டார். அவளுடைய நினைவை அறவே மறந்தொழிந்தார். யோகீச்வரரின் ஆதரவிலேயே இருந்து பலவித யோகாப்பியாசங்களையும் இன்னு மற்ற நல் விஷயங்களையும் கற்றுக் கொண்டு தீக்ஷை வளர்த்துக் கொண்டு யோகத்தின் மீதே நாட்டமாக ஆய்விட்டார். ஆயினும் அடிக்கடி தமது மகளை வந்து பார்த்துச் செல்வதாக விருந்தார்.

இவ்விதமே சில மாதங்கள் சென்றன. ஏமாவதி புஷ்பவதியானுள். கிழவியின் உதவியால் அதற்கான சடங்குகளும் நடைபெற்றன. பிறகு ஓர் சுப தினம் யோகீச்வரரால் தேர்ந்தெடுக்கப்பட்டு சாந்தி முகூர்த்தத்தை நடத்திவிட்டார்கள். சிதம்பரமும் ஏமாவும் பூவும் மணமும் போலும், தேனும் பாலும் போலும், கனியும் ருசியும் போலும், கண்ணும் கண்ணின் மணியையும் போலும், உடலும் உயிரும் போலும், நகமும் சதையும் போலும்

விளக்கும் ஒளியும் போலும், ஒருமனப்பட்டு இன்பமாக இல்லறம் நடத்தலானூர்கள். தம்பதிகளுடைய அன்பையும், தெய்வ பக்தியையும், சுத்தமான சீலத்தையும் கூறற்பாலது. தயானந்தர் உண்மையான தெய்பக்தியில் ஈடு பட்டவரானுர். அவர் தமது மகளேயும் மருமகனையும் அடிக்கடி சென்று பார்த்து வருவதுடன் அவர்களுக்கு நல்ல போதனையை போதித்துக்கொண்டு வந்தார்.

இவ்விதமாக ஒருவருடம் கழிந்தது. ஏமாவதி கருப்பவதியாகி பத்துமதியும் கடந்து ஓர் சுப தினத்தில் கிழவியின் உதவியால் அழகிய பெண் மகவை ஈன்றுள். குழந்தையுடைய லக்ஷணத்தை வருணித்தல் பாலது. கோடி சூரியன் உதயமானது போலும், சாக்ஷாத் மகா லக்ஷ்மியே அவதாரமாகி குழந்தை வடிவமாக வந்து விட்டாளென்றும் ஐயுறும்படியாக விளங்கிற்று. தனது மகளுக்கு ஒரு அழகிய பெண் பிறந்த சந்தோஷத்தினுல் தயாநந்தர் அளவற்ற மகிழ்ச்சி யடைந்து கற்கண்டு வழங்கினர். தனது குருவாகிய யோகீச்வரரையும் இவ்விடத்திற்கு அழைத்து வந்து அந்த குழந்தையின் புண்யாவாசனத்தை அதி சிறப்பாகச் செய்வித்து அந்த குழந்தைக்கு தனது தாயாரின் திரு நாமமாகிய **நவநீதம்மாள்** என்ற நாமத்தையே சூட்டக் கருதி யோகீச்வரரின் உத்திரவைப் பெற்று அவருடைய ஆசீர்வாதத்தை முன்னிட்டு குழந்தைக்கு நவநீத மென்ற நாமத்தை அழகாயும் அருமையாயும் சூட்டினுர்.

குழந்தையின் ஜாதகத்தைக் கணித்த யோகீச்வரர் "அது வெகு உயர்ந்த ஜாதகம்" என்று கூறினுர். குழந்தை பிறந்த அதிர்ஷ்டத்தினுல் சிதம்பரத்திற்கு அவன் வேலை செய்துகொண்டிருந்த ஆபீஸின் கிளையாபீஸ் வேறு ஊரிலிருப்பதில் மானேஜர் வேலை 100 ரூபாய் சம்பளத்தில் கிடைத்தது. அது கண்டு எல்லோரும் களிப்புற்று வெளியூருக்கு தயாநந்தரிடமும் யோகீச்வரரிடமும் உத்திரவு பெற்றுக்கொண்டு சென்றுர்கள். நவநீதம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருகிறுள். வளர் பிறை மதியம் போல அவளுடைய எழிலும், புத்தியும், விளையாட்டின் தன்மையும் செழித்து ஓங்கி வருகின்றது. மழலை மொழியினுல்

தன் பெற்றோரையும் பாட்டனாரையும் மகிழ்விக்கலானாள். சிதம்பரத்தின் ஆநந்தத்திற்கு எல்லையே இல்லை; கட்டுமீறிப் பொங்குகின்றது. அவனுடைய மேன்மையான தன்மையில் தனது ஆதி பருவங்களை எண்ணித் தானே வெட்கி வெறுத்து வந்தான்.

நவநீதத்திற்கு 6 வயது ஆகியதும் கலாசாலையில் சேர்த்து நன்றாகக் கல்வி கற்றுக்கொடுத்துவந்தார்கள். அவள் இயற்கையிலேயே அதி உன்னதமான புத்தி நுட்பமுடையவளாகையால் கல்விச்சாலையில் உபாத்தியாயர்கள் கொண்டாடும்படி சகல கல்விகளையும் கற்றுக்கொண்டாள். அவளுடைய பொழுது முற்றும் தெய்வ பக்தியிலும், அறிவை வளர்க்கும் அரிய புத்தகங்களைப் படிப்பதிலும் செலவிடுவாளேயன்றி அன்னிய பெண்களுடன் கூடி ஆடித் திரிவதும், கோட்சொல்வதும், தீமைசெய்வதும், சோம்பேரியாகத் திரிவதுமாய்க் கழித்தவளன்று. நவநீதம் தனது பெற்றோருக்கும் பாட்டனாருக்கும் கடுநாயகமாக விளங்கினாள். தயாநந்தர் ஒரு மாதம் மகளிடத்திலும் 3 மாதம் யோகீச்வர் வசிக்குமிடத்திலுமாகக் காலத்தைக் கழிக்கலானார். நவநீதம் தனது யுக்த வயதில் புஷ்பவதியானாள். அதன் பிறகு கலாசாலைக்குச் செல்வதை நிறுத்திவிட்டாள். வீட்டிலிருந்தபடியே தனது வித்தையை வியர்த்தம் செய்யாது அபிவிருத்தி செய்துகொண்டு வந்தாள்.

இவ்விதமிருக்கும் நாளையில் நமது கதாநாயகனாகிய முத்துக்ருஷ்ணன் தனது ஆபீஸ் விஷயமாக இவ்வூருக்கு வரும்படியாக நேர்ந்தது. அவ்வாறு வந்தவன், தன்னுடன் கூடவந்த போலீஸ் உத்தியோகஸ்தர் மற்றொருவருக்கு நமது சிதம்பரம் பரிச்சயமானவராகையால் தங்களுடைய ஜாகையை சிதம்பரத்தின் வீட்டில் வைத்துக்கொள்ள நேர்ந்தது; அங்ஙனம் தங்கியமுத்துக்ருஷ்ணனும், நவநீதமும் ஒரு நாள் எதிர்பாராவிதமாக சந்திக்கவும் இருவருடைய விழிகளும் சம்மந்தப்பட்டுப்பேசவும் அவ்விழிகளே இருவருடைய கருத்தை உணர்த்தும் தூதுவனாகவும் அமைந்துவிட்டன. முத்துக்கிருஷ்ணன் அவ்விடத்தில்;ஒருவாரம் தங்கும்படி நேர்ந்தது. அந்த ஒருவாரத்திற்குள் இருவருடைய மனமும் ஒன்றுபட்டு காதல் நிறைந்துவிட்டது. இந்த அபூர்வமான ஜாடையை அறிந்த தயாநந்

தர் தமது மருமகன், மகள் இருவருடன் கலந்து யோசனை செய்து முத்துக்ருஷ்ணன் மகா யோக்கியனாகியபடியால் அவனுக்கு நவநீதத்தைக் கொடுத்துவிடுவதென்று யோசித்து, தீர்மானித்துத் தமது குருவாகிய யோகீச்வரரிடம் தெரிவித்து அவருடைய சம்மதத்தையும் பெற்று பிறகு முத்துக்ருஷ்ணனிடம் தெரிவித்தார்கள்.

கரும்பு தின்பதற்குக் கூலி கேட்பாருண்டோ! என்பதுபோல தான் ஏற்கெனவே நவநீதத்தின் காதல் கணையால் பிணைக்கப்பட்டிருப்பதால் அதற்கு அவன் இசைந்தான். தனது முதல் மனைவி இறந்துவிட்டதாகவும் தெரிவித்தான். அவனுடைய தமக்கையின் யோசனையைக் கேட்காது தானே துணிபுடன் தீர்மானித்து நிச்சயம் செய்துவிட்டு விவாகத்திற்கு மட்டும் அவர்களை வரவழைத்து நவநீதத்தை வெகு சந்தோஷத்துடன் மணந்துகொண்டான். தயாநந்தர் இருவருக்கும் வெகு சிறப்பாக விவாகத்தை நடத்தி தம்மாலியன்ற ஸ்ரீதன மளித்து நவநீதத்தை அவனுடன் அனுப்பினர்.

ஏமாவதியும் நவநீதத்திற்கு அளவற்ற புத்திகளைச் சொல்லி அனுப்பினள். நவநீதம் வெகு சந்தோஷத்துடன் தன் கணவனுடன் சென்று பதிசொல் கடவாப் பாவையாயும், ப்ரியத்தில் சிறந்த ப்ரேமாவதியாயும், தெய்வபக்தியில் ஈடுபட்ட தருணீமணியாயும் விளங்கி இல்லறம் நடத்தி வந்தாள். சில மாதத்திற்குள் சிதம்பரம் வசிக்கும் ஊரிலேயே முத்துக்ருஷ்ணனையும் மாற்றிவிட்டார்கள். அங்கு தனித்த விடுதியில் குடும்பம் நடத்திவந்தார்கள். அவ்விதம் நடத்தும் காலத்தில்தான் நாம் முதல் அத்தியாயத்திலும் மற்ற அதிகாரங்களிலும் குறித்துள்ள விஷயங்கள் நடந்தேறின.

தயாநந்தருடைய குருவாகிய யோகீச்வரர் நோய்வாய்ப்பட்டு இறக்குந்தறுவாய்க்கு வந்துவிட்டார். அவர் நவநீதத்தைப் பார்க்க வேண்டுமென்று நிரம்பவும் ஆவலுடனும் உண்மையான ப்ரேமையுடனும் ஆசித்ததால் அவருடைய சகலமான பணிவிடைகளை எல்லாம்செய்யும் தயாநந்தர் சிதம்பரத்திற்குச் சொல்லியனுப்ப, சிதம்பரம் நவநீதத்திற்குச் சொல்லியனுப்பினர். யோகீச்வரருடைய

அந்திய காலம் சமீபித்துவிட்டபடியால் தயாநந்தர் அவரைத் தமது மகளின் இல்லத்திலேயே அழைத்துவைத்துக்கொண்டு சிச்ருஷை செய்துவந்தார்.

முன்னதிகாரத்தில் கூறியபடி முத்துக்ருஷ்ணனுடன் புறப்பட்ட நவநீதம் நேரே தந்தையின் வீட்டை யடைந்து எல்லோரையும் வணங்கி தன்னை யழைத்த காரணங் கேட்டாள். தயாநந்தர் யோகீச்வரரின் நிலைமையையும் அவர் விருப்பத்திற்காக அழைத்ததாகவும் தெரிவித்து அவளை யோகீச்வரரின் முன்னிலையில் அழைத்துச்சென்றார். யோகீச்வரரின் அந்திய காலத்தை யறிந்து நவநீதம் வருத்தமுற்று அவரருகில் சென்று, "சுவாமி! யோகீச்வரரே! இதோ நவநீதம் வந்திருக்கிறேன்; கண் திறந்து பாருங்கள்." என்று வெகு நயமாகக் கூறினாள்.

இவளுடைய வருகைக்கு ஆவலுடன் எதிர் பார்த்திருந்த யோகீச்வரர் கண்ணைத் திறந்து பார்த்தார். ஆநந்தம் பொங்கிய பார்வையுடன் நவநீதத்தைத் தமது கரத்தினால் தடவிக்கொடுத்தபடியே "என் செல்வமே! நவநீதம்! இவ்வுலகத்தில் யான் சகலமும் அனுபவித்தேன். பின்னர் சகலத்தையும் வெறுத்து உலக இன்பம் நச்வரமானதென்பதை யுணர்ந்து துறவறத்தை மேற்கொண்டேன். எனது காலத்தை முற்றும் இவ்விதமான தெய்வ பக்தியிலேயே செலுத்திவிட்டேன். எனது சரித்திரத்தை யறியாமலேயே எனது உயிர் நண்பராகப் பழகிவரும் தயாநந்தரும், உனது பெற்றோரும் எனக்குச் செய்துவரும் உபகாரத்தை அளவிடவியலாது. எனது அந்தியகாலமும் சமீபித்துவிட்டபடியால் என்னுள்ளத்திலேயே அடக்கமாகியிருந்த எனது சரித்திரத்தை உங்களெல்லோருக்கும் உரைத்துவிட வெண்ணியே யான் தற்போது உங்களை அழைத்தேன். உங்களை ஏன் அழைக்கவேண்டுமென்று நீங்கள் நினைக்கலாம். விஷயத்தைக் கேட்டறிந்த பின்னர் உங்களுக்கே விளங்கிவிடும். எல்லோரும் சற்று சாவதானமாகக் கேட்டுக்கொள்ளுங்கள்" என்றார். இதைக் கேட்டதே எல்லோருக்கும் அளவிலடங்காத ஆச்சரியமும், ப்ரமிப்பும் உண்டாகிவிட்டது. "இந்த யோகீச்

வரர் என்ன விதமான சங்கதியைத்—சரித்திரத்தை—தெரிவிக்கப் போகிறார்?" என்ற ஆவலும் அதிசயமும் கொண்டு அவர்கள் அவர் வாயையே வெகு கவனத்துடன் எதிர் பார்த்திருந்தார்கள்.

---

## 11—வது அதிகாரம்.

### நீரை விட்டுப் பிரித்த காரல்

தன்னுடைய குழந்தையைக் காணவில்லை என்ற சொல்லைக் கேட்டதும் வெதும்பித் துவண்டு பூமியில் விழுந்து மூர்ச்சையுற்ற கல்யாணியின் பரிதாபகரமான நிலைமையைக் கண்ட அங்கிருந்த ஏனையோரும் மனமுருகிக் கண்ணீர் விட்டு கல்யாணியின் மூர்ச்சையைத் தெளியவைத்தார்கள். மூர்ச்சை தெளியப் பெற்ற கல்யாணி அலறியபடியே "ஆகா! என் கண்மணி! புஷ்பா! உன்னுடைய எழில் நிறைந்த தாமரைக் கமலம் போன்ற முகத்தின் தரிசனத்தினால் என் மன வருத்தம் முற்றும் சகித்துக்கொண்டு என் காலத்தைக் கடத்தி வந்தேனே! என் கண்மணியே! நீயும் என்னை பரதேசிபோலத் தவிக்க விட்டுவிட்டு எங்கு சென்றுவிட்டாயடீ! என் செல்லமே! என்னைக் காக்கும் கடவுள் உன் வடிவாக வந்திருக்கிறார் என்று யான் நினைத்திருந்தேனே! என் எண்ணத்தில் மண்ணைப் போட்டுவிட்டு எப்படி கண்ணிற்கு எட்டாது மறைந்து விட்டாயடீ! என் தங்கமே! என்னுடைய நிலைமை நடுக் கடலில்—அலை காற்றில்—அகப்பட்ட துரும்பு போல ஆய்விட்டதே! ஆ! நான் என் செய்வேன்! கடவுளையே நம்பிய என்னை இவ்விதமாகவா அவர் பரிசோதிக்கவேண்டும்? அந்தோ! சற்று முன் வகுத்துச் சொல்வேன் வரும் வினையை அறிந்திடுவாய் தாயே! என்று ஓர் சாது சொல்லிய வாக்கியம் உண்மையாகிவிட்டதே! அந்த சாதுவையே யான் என்ன விபத்து வரும் என்பதை விரிவாகக் கேட்டுக்கொள்ளாமலும் அதற்குத் தகுந்த சாந்திகள் செய்யும் முறையை அறிந்து கொள்ளாமலும் போய்விட்டேனே! அந்த புண்ணியாத்துமாவை யான் முதலில் சந்தேகமாக எண்ணிய தன் பலனோ எனக்கு இத்தகைய

கதி நேர்ந்தது. ஆகா! அந்த பரதேசி இருக்கு மிடத்தை யான் எவ்வித மறிவேன்? வேதகிரீசனின் கோயிலே தன திருப்பிடம் என்று உரைத்தனரே! ஏ! வேதகிரீசா! என்னை ஏன் இன்னும் பரிசோதனை செய்கின்றாய்! என்னால் தாங்க வியலாத சங்கடங்களை எல்லாம் எனக்குக் காட்டினாய்! எல்லாவற்றையும் அந்த குழந்தையின் முகார விந்தத்தின் தரிசனத்தினால் சகித்து வந்தேனே! அத்தகைய குழந்தையை ஏன் பிரித்து என்னை பரிதபிக்கச் செய்கிறாய்! என்னால் இனி பட முடியாத துயரத்தை எவ்விதம் சகிப்பேன்? பட்டதெல்லாம் போதாவா! இன்னமும் என்னை விசனக் கடலில் ஆழ்த்தி வேடிக்கை பார்க்க உன் மனமென்ன கல்லா! இரும்பா! கடினமான பாறையா! ஐயோ! என் கண்மணியை இனிக் காண் பேனா! என்னுருயிர் செல்வத்தை, என்னுயிக் கமுதத்தை, என் கட்டிக் கரும்பை—யான் எப்போது காண்பேன்? ஹா! புஷ்பா! புஷ்பா! என்னடீ செய்வேன்! என்னை அழவேண்டா மென்று கூறித் தேற்றமாட்டாயா! என் மனத் துயரத்தை ஆற்றமாட்டாயா?" என்று காண்போருடைய கண்களில் வெள்ளப் பெருக் கெடுத்து மனத்தின் கட்டுதளர்ந்து கரைந்து உருகிப் புலம்பும்படியாக பரிதாபகரமாய்க் கதறுகிறாள். தலையிலும் வயிற்றிலும் மோதிக் கொள்கிறாள். தன்னைப் பெற்ற தாய் தன்னிறை யழிந்து படுத்துக் கிடப்பதால் சகலருக்கும் தாயாகிய பூமாதேவியினிடம் தனது குறைகளைக் கூறுவது போல பூமியில் விழுந்து புரண்டு சோகத் தைத் தாங்க வியலாது அபாரமாய்ப் பிரலாபிக்கின்றாள். இவளுடைய நிலைமையைக் கண்ட எல்லோரும் இவளைத் தேற்றவும் சக்தி யற்ற வர்களாய் கண்ணீர் வடித்தபடியே நிற்கின்றார்களே யன்றி மற்ற படி அவர்களால் ஒன்றும் செய்யவோ சொல்லவோ கூடவில்லை. அவ்வாறு புலம்பியவர்களில் ஒரு கிழவி சற்று தேறியவளாய் கல்யாணியை பூமியிலிருந்து எடுத்து உட்காரச் செய்து "அம்மா! நீ இவ்விதம் புலம்பிக்கொண்டிருந்தால் குழந்தையைத் தேட வேண்டாமா? இப்போதே தெருக்களோடு விசாரித்துக்கொண்டு போனால் தெரியவரும். எழுந்திரு; நானும் உனக்குத் துணையாக வருகிறேன். நீயோ தற்போது திக்கில்லாது கிடக்கின்றாய்! எழுந்துவா அம்மா!" என்று இதமாகக் கூறித் தேற்றி அவளை

அழைத்துக்கொண்டு வீதியோடு இருபுறமும் உள்ள வீடுகளில் "இவ் வழியாக ஓர் பெண் குழந்தை சென்றதா?" என்று விசாரித்துக்கொண்டே செல்லலானுள்.

கல்யாணிக்கோ வீதியில் செல்லும் எந்த குழந்தையைப் பார்த்தாலும் தன் புஷ்பாவைப் போலவே தோன்றுகின்றது அந்த குழந்தைகளின் அருகில் சென்று "என் கண்ணே! புஷ்பா! புஷ்பா!" என்று அனற்றியவாறு அவைகளை வாரி எடுத்து கவனிக்கின்ருள். அது தன் குழந்தையாக இல்லாததைக் கண்டு மனங் கலங்கிப் போய், விடுத்துச் செல்வதுமாக பல தெருக்களையும் தாண்டிச் சென்றுகொண்டே இருக்கிருள். அவள் அலறும் நிலைமையைக் கண்டு எல்லோரும் வருத்தமுற்றுக் கலங்குகின்ருர்களேயன்றி குழந்தை சென்ற தகவலை யறிந்து சொல்லும் புண்ணியாத்துமாக்கள் யாரு மில்லை. இரவும் வெகு விரைவில் சென்று கொண்டே இருக்கின்றது. இவளுடைய பரிதாபத்தைக் கண்டு கலங்கிய ஒரு போலீஸ் வீரன் குழந்தையின் அடையாளங்களை எல்லாம் கேட்டு விசாரித்து எழுதிக்கொண்டு குழந்தையைத் தாம் தம்மாலான முயற்சியுடன் தேடுவதாக வாக்களித்து கல்யாணியை அவள் தங்கி யிருந்த சத்திரத்தில் கொணர்ந்து விட்டுத் தேறுதல் மொழிகளைக் கூறிவிட்டுச் சென்றுன்.

காம்பொடி பட்ட தாமரையைப் போல கல்யாணி துடி துடித்த வண்ண மிருக்கிருள். அவளுடைய தாயாருக்குப் பிரக்ஞையே வரவில்லை. அவளுடைய நிலைமை மிகவும் கவலைக்கிடமாகிவிட்டது. கல்யாணி தன்னுடைய மனோ வேதனையுடன் தாயாருக்குத் தன்னுல் கூடுமான சிகிச்சைகளைச் செய்தும் அவளுக்கு ஆகாராதிகளை பலவந்தமாகச் செலுத்தியும் பாடு படுவது முற்றும் வீணுகிவிட்டது. இவ்விதமே இரவு சென்றது. பொழுதும் புலர்ந்தது. குழந்தையின் தகவலோ ஒன்றும் தெரியவில்லை. தன் தாயாரின் மூர்ச்சையும் தெளியவில்லை. கல்யாணியின் உயிர் துடிக்கும் துடிப்பை வரையற் பாலதோ. அத்தகைய நிலைமையில் கல்யாணி அன்னத்தையும் விரும்பவில்லை. "ஆகா! நான்

என் வயிற்றுப் பூச்சி என்னைவிட்டுப் பறந்துவிட்டதற்கு அழுவேனா! என்னைப் பெற்ற மாதாவின் கோரமான நிலையைக் கண்டு வருந்துவேனா! என்னை எல்லோரும் சேர்ந்து செய்த சதியை எண்ணி துயரப் படுவேனா! என் கணவன் என்னை விலக்கியதை எண்ணி மடிவேனா! இந்த வேதகிரீசன் என்னை சோதிப்பதைக் கண்டு தான் புறுவேனா! ஜகத்ரக்ஷகியாகிய திரிபுர சுந்தரியும் என்னை பராமரித்துவிட்டதை எண்ணி விசனப் படுவேனா! அயல் தேயத்தில் வந்து அவஸ்தைப் படுவதை எண்ணிக் கலங்குவேனா! ஆ! நான் எதைத் தான் எண்ணித் துடிப்பேன்! ஐயோ! ஒன்றை ஏன் நோக வேண்டும்? நம்முடைய ஊழ்வினையின் பயனை யல்லவா நாம் தற்போது அனுபவிக்கின்றோம்! அதை எண்ணாது வீணான வாதனையை ஏன் அடையவேண்டும்? என்னப்பனே ஜகதீசா! யான் என்னசெய்வேன்? என்னை உயிருடன் வதை செய்யாமல் உன்னடியில் சேர்த்துக்கொள்ளலாகாதா!'' என்று கதறியவாறு உட்கார்ந்திருக்கிறாள். தன் தாயார் ஒரு சிறிதும் தெளிவு படவில்லை.

இவ்விதமான நிலைமையிலேயே 4 நாட்கள் கழிந்துவிட்டன. குழந்தையின் தகவலும் ஒன்றும் தெரியவில்லை. சிங்காரம்மாளின் நிலைமையும் சந்தேகமாகிவிட்டது. அந்தோ! வந்தவிடத்தில் தன் குழந்தையையும் கண் காணுமல் உயிருடன் பறிகொடுத்துவிட்டுத் தன் தாயாரின் நிலைமையும் கவலைக் கிடமாகி விட்டதைக் கண்ட கல்யாணியின் நிலைமை எவ்விதந் தானிருக்கும்? அதை யூகித்தறிதலே நலம். அவளுடைய உயிர் உடலிலில்லை என்றே கூறலாம். அத்தகைய நிலைமையில் அவளை ஆற்றுவாரு மில்லை; தேற்றுவாரு மில்லை. தன் தாயின் முகத்துடன் முகம் பதித்து ''ஆ! என் தாயே! என்னுருயிர்த் தாயே! என்னை நடுச் சந்தியில் விட்டுவிட்டு நீ பிரயாணமாகிவிட்டாயோ! ஐயோ! இவ் வகிலத்தில் ஆணிலோ பெண்ணிலோ என்னைப் போன்ற பாவிகள் யாரேனு மிருப்பார்களா! ஐயிருதிங்களாய் அங்கமெலாம் நொந்து பெற்றெடுத்த என் தாயே! ஐயோ! என்னை நைந்து உருகும்படியாக விட்டுவிட்டாயே! உன்னையே நம்பி வெளிப் போந்தேனே என் அன்னாய்! கன்னெஞ்சுடையவளாய் என்னைக் கதறவிட்டுவிட்டாயே! அலை கட்டிய துரும்பு போல என்னுள்ளம் [illegible] [illegible] புரண்டு கலங்கவைத்துவிட்டாயே!

182807

# சென்னை வர்த்தமானி

ஞாயிற்றுக்கிழமை தோறும் வெளிவருவது, சனி ஞாயிறில் வரும் தந்திகளோடு, அநேக அரிய வியாசங்களும், அயல் நர்ட்டு சம்பவங்களும் அடங்கப்பெற்றது. மாணவர்களுக்கு இன்றியமையாதது.

வருஷ சந்தா ரூ 3—0—0. 6 மாதத்திற்கு ரூ 1—12—0.

மானேஜர்,
அங்கப்ப நாயகன் தெரு,
ஜி. டி. சென்னை.

## "கிருஷிகன்"

ஓர் மாதாந்த விவசாயப் பத்திரிகை.

பத்திரிகாசிரியர்கள்:—

(1) ராவ்பஹதூர் ஜெ. செல்வரங்கராஜு
பென்ஷண்ட் விவசாய டெப்டி டைரெக்டர்

(2) J. R. ரங்கராஜு

வருஷ சந்தா தபால் கூலி உள்பட ரூபாய் ஒன்றுதான்.

எல்லோரும் சுலபமாய் அறிந்து கொள்ளக் கூடிய எளிய நடையில் கிருஷிகருக்கு அனுகூலமுண்டாகக் கூடிய வழிகளை எடுத்துக் காட்டுவதிலும், கிருஷிகருக்கு ஏற்படும் சந்தேகங்களை நிவர்த்திப்பதிலும் "கிருஷிகனு"க்குச் சமானமான பத்திரிகை கிடையவே கிடையாதென்பது நிச்சயம்.

"கிருஷிகன்" பத்திரிகையானது சுயநலத்தைக் கருதாது விவசாய அபிவிருத்தியையும், அதன் மூலமாய் தேசக்ஷேமத்தையும் கருதி வெளிப்படுவதால் வருஷ சந்தா தபால் கூலி உள்பட ரூ. ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது.

வி. பி. மூலமாய் அனுப்பினல் ரிஜிஸ்ட்ரேஷன் கூலி சேர்ந்து ரூ 1-4-0 ஆகும். ஆகையால் உடனே ரூ. ஒன்று மணியார்டர் செய்து தங்கள் பேர்களைப் பதிவு செய்து பத்திரிகை பெற்றுக் கொள்ளுங்கள்.

மானேஜர் "கிருஷிகன்" ஆபீஸ்,
"ஜகந்நாதபாக்" சைதாப்பேட்டை, சென்னை.

# அமிர்தாஞ்சனம்




எல்லா நோய்களுக்கும் திவ்ய ஔஷதம்

**40 வருஷங்களாக**

"ஜகன்மோகினி" யாய் விளங்குவது

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

விலை அணா பத்து.

அமிர்தாஞ்சன் டிபோ,

7, தம்புச்செட்டி வீதி, சென்னை.